259

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 10—No. 11.

OFFICE OF ... 20 DEC 1937

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் ௧௦	ஈசுவர ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1937௵ நவம்பர்௴	இதழ் ௧௧

உள்ளுறை	பக்கம்
மஹோத்ஸவம்	௫௨௧
மட்குடமும் பொற்குடமும்	௫௩௯
உருவ வழிபாட்டின் உள்பொருள்	௫௪௧
எச்சம்	௫௪௫
ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும் ...	௫௪௮
அப்பரும் யாக்கையும்	௫௫௪
ஹிராஸ் பாதிரியார் சொற்பொழிவுகள் ...	௫௬௧
திருக்கயிலாய யாத்திரை	௫௬௩
அண்ணாமலையில் அட்டூழியம்	௫௬௮
சம்பந்தர் தேவாரமும் சர்வகலாசாலை உரையும் ...	௫௬௯
மாறும் உலகில் மதத்திற்கிடம்	௫௭௩

பத்திராசிரியர் : அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1937 தனிப் பிரதி அணா 4.

சிவமயம்

சமாஜ அறிக்கைகள்

நமது சமாஜம் நடத்தும் சைவத்தேர்வுகள் 1937ஆம் நவம்பர்மீ 21உ ஞாயிற்றுக்கிழமை யன்று சென்னையிலும் மாணவர்கள் சௌகரியத்தை யனுசரித்து வேறு பல இடங்களிலும் நடைபெறும். மாணவர்கட்குத் தேர்வுநிலைய நுழைவுச் சீட்டுகள் (Hall Tickets) 10-11-1937ல் சதாரண தபால் மூலம் அனுப்பப்படும். தேர்வின் முடிபு 10-12-1937ல் வெளிவரும் சித்தாந்தத்தில் அறிவிக்கப்படும்.

2. நமது சமாஜத்திய ஐப்பசி மாதக் கூட்டம், மாடம்பாக்கம் கிராமத்தில் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் 22-10-1937ல் கூடிற்று. திருவாளர்கள் திரு. வி. உலகநாத முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ச. சிவகுமாரன் ஆகிய அன்பர்கள் முறையே திருப்புகழ், கிராமத்தார் கடமை, சமயநெறி, என்பன பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியாரவர்கள் தலைவர்க்கும், சொற்பொழிவாளர்கட்கும், கூட்டத்தை நடத்தி வைத்த ஸ்ரீமத் பால்சுவாமிகட்கும் பிறர்க்கும் நன்றி கூறினார்கள்.

3. கார்த்திகை மாதக் கூட்டத்தைத் தங்கள் ஊரில் நடத்தக் கருதும் அன்பர்கள் உடனே நமக்கு எழுதி முடிக்க வேண்டுகிறோம்.

மதிப்புரை

வழி காட்டும் வான் பொருள் என்னும் நூல் ஒன்று எமது பார்வைக்கு வந்தது. இந்நூல் ஸ்ரீ இரெட்டிப்பட்டி சுவாமிகள் வரலாற்றைக் கூறுவது. எழுதியவர் சைதாப்பேட்டை முனிசிபல் கமிஷனர், திருவாளர் ஸீ. இராமலிங்க முதலியார் அவர்கள். இதற்கு சைவத் திருவாளர் - ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் முன்னுரை ஒன்று வழங்கியுள்ளார். கடவுளிருப்பிலும் அவர் கருணைத் திறத்திலும் உறுதியான நம்பிக்கையைச் சுவாமிகள் கொண்டிருந்தார்கள். அந்நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு சில சட்டங்கள்

Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

மலர் ௧௦	ஈசுவர ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1937௵ நவம்பர்௴	இதழ் ௧௧

மகோத்ஸவம்*

உத்ஸவம் என்பது உயர்ந்த சிருஷ்டி எனப் பொருள் படும். இறைவன் உயிர்களாகிய நம்பொருட்டு சிருஷ்டியை மேற்கொள்ளுகிறான். அந்நிலையையே நாம் உத்ஸவம் என்கிறோம். அவ்வுத்ஸவம் நம்பொருட்டு நிகழ்வதால் முதலில் நாம் யார் என்பதை ஆராய்தல் வேண்டும்.

உடலும் உயிரும்

நான் என்ற பதம் உடலைக் குறிப்பதாகவே சாதாரண மனிதன் எண்ணுகிறான். என் உடம்பு என்னும்போது உடல் வேறாகவும், உயிர் வேறாகவும் காணப்படுகிறது. இன்னும் சிறிது ஆராய்ந்து சென்றால் நான் என்னும் பதம் உடல், உயிர் முதலிய இரண்டையும் குறிக்கும் பதம் அன்று என்

*(இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளீச் சரத்தில் 28-4-37ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. சே. த. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களால் எழுதப்பெற்றது.)

பது தெளிவாகும். பின்னர் அஃது எதைக் குறிக்கிறது? நம் உயிருக்கு உயிராகவுள்ள இறைவனையே அது குறிக்கிறது.

உலகத்தைப் பார்க்கவொட்டாது நம்மை ஒன்று மறைத்துக் கொண்டிருக்கிறது. உடலில் உயிர் இருந்தாலும் கண் இல்லாவிட்டால் உலகத்தைக் காண முடியாது. அக்கண் போன்றது கலை. கலையை விளக்கம் என்னலாம். உயிரும் உடலும் கலையோடு கூடாவிட்டால் அறிவு விளக்கம்பெறாது. இதற்கு உதாரணமாக மணியோசையைக் கூறலாம். நாக்கையும் மணியையும் ஒன்றுசேர்ப்பதால் மட்டும் ஓசை உண்டாகாது. அம்மணிக்கும் நமக்கும் இடையில் ஆகாயம் இருந்தாலொழிய அவ்வோசை நம் காதுக்கு எட்டாது. இவ்வாகாயம் போன்றது கலை. இம்மூன்றையும் ஒன்றுசேர்த்து வைப்பவன் எவனோ அவனே கடவுள். அதனாலேயே அவனது பேராற்றலும் கருணையும் விளங்குகின்றன. உடலும் உயிரும் கூடாத நிலைக்குக் கேவலநிலை என்று பெயர்.

பொன்மேல் மை இருந்தால் பொன்னில் பிரகாசம் உண்டாகாது. பொன்னின் பிரகாசத்தை மை மறைத்து நிற்கும். அது போன்று நம்மிடத்துள்ள அறிவோடு அறியாமையும் கலந்து இருப்பதால் அறிவு விளக்கம் பெறுவதில்லை. அரிசி வேறு; தவிடு உமி முதலியன வேறு. ஒன்றுசேர்ந்த இவற்றைப் பிரிக்க முயற்சிவேண்டும். நெல்லைப் பல தடவை குத்தக் குத்த அரிசியாதல்போல் பலதடவை முயன்றாலேயே அறிவினின்றும் அறியாமை நீங்கும்.

கடவுள்

நம்மிடமுள்ள அறியாமையை நீக்க முடியாத ஒரு நிலைமை நமக்குண்டு. அதற்கு ஆவாரகநிலை என்று பெயர். இந்நிலை விஷயம், சொரூபம் என இருவகைப்படும். அவ்வறி

யாமையை நீக்கிக்கொள்ள நாம் முயல்வதில்லை. அதை நீக்கக் கடவுள் தானாகவே நம்மிடம் வருகிறான்; பிறக்கும்போது நமக்குப் பரிசுத்தமாகிய உடலைத் தருகிறான். கடவுள் தந்த அவ்வுடலைக் கடவுளுடையதென்னாது நாம் நம்முடையதென்று கூறுகிறோம். இவ்வுடலை நமக்குத் தந்த கடவுளின் தயையையும் நாம் மறந்து விடுகிறோம்.

கடவுள் ஒருவனே. அவன் பல உருவங்களை மேற்கொள்கிறான். உருவத்துக்கேற்பப் பெயரும் பல உண்டு. அரிசியைக் கொண்டு பல பலகாரங்கள் செய்யப்படுகின்றன. அப்பலகாரங்களுக்கெல்லாம் மூலபொருள் ஒன்று. அதுவே அரிசி. அதுபோல உலகத்தில் பல மதங்கள் இருக்கின்றன. அவை கடவுளுக்குப் பல உருவங்களைக் கூறுகின்றன. மூலம் ஒன்றே; இரண்டன்று.

மலங்கள்

நம்மிடத்துள்ள ஆணவம், கன்மம், மாயை முதலிய குற்றங்களைப் போக்கிக் கொள்ளப் பெரியோர் சிலமுறைகளை வகுத்துள்ளார். அவற்றை ஆராய்ந்த பிறகே அம்முறைகளை அனுஷ்டிப்பேனென்பது மடமை. நாம் நோய்வாய்ப் பட்டிருக்கும்போது வைத்தியர் மருந்து தருகிறார். மருந்தின் உட்பொருளை ஆராய்ந்த பிறகே நான் அதை உண்பேனென்றல் மடமையாகாதோ? முயலவேண்டுவது நமது கடமை. பலனை நல்குவது ஆண்டவன் கடமை. அப்பலன் எப்போது வருமென்று கூறுதலும் கடினம். இப்பிறவியிலேயே பெற்றாலும் பெறலாம்; இன்றேல் அடுத்தபிறவியில் பெறலாம். முயற்சி வீணாகாது.

நம்மிடத்து ஆணவம் எதுவரையில் உண்டோ அதுவரையில் நமக்குப் பிறவி உண்டு. குற்றம் செய்தபிள்ளையைத் தண்டித்துப் பிதா அவனை அணைப்பதுபோல நமது பாவ புண்ணியத்துக்கேற்ற பலனைத் தந்து மரணத்துக்குப்

பின் நம்மைக் கடவுள் தன்னிடத்து ஒடுக்கிக் கொள்கிருன். குழந்தைகள் பொருட்டுத் தாயார் மருந்து சாப்பிடுவதைப் போல ஆன்மாக்களாகிய நமது இடர் தீரும் வண்ணம், நமது பிரம மாதாவாகிய பராசத்தி ஆண்டவனை நோக்கி மகாசிவ ராத்திரியினன்று பூசிக்கிருள். தனக்கென உழைப்பவன் சிறியவன்; பிறர்க்கென உழைப்பவன் பெரியவன். கடவுள் பெரியவனுதலைக் காண்க.

பஞ்சகிருத்தியம்

நம்மிடத்துள்ள ஆணவமல பரிபாகத்திற்குச் சிருஷ்டியையும், மாயா மல பரிபாகத்திற்கு ஸ்திதியையும், கன்ம மல பரிபாகத்திற்குச் சம்ஹாரத்தையும் ஆண்டவன் மேற்கொள்கிருன். இம்மூன்ருேடு திரோபவத்தையும், அனுக்கிரகத்தையும் கூட்டப் பஞ்சகிருத்தியமாகிறது. இப்பஞ்சகிருத்தியத்தை உயிர்களின் நன்மைக்காகவே ஆண்டவன் செய்கிருன்.

ஆத்மவாதிகள்

நமது உயிரைப் பலர் பலவிதமாகக் கூறுவர்.

1. சிலர் ஆத்மா உயிரன்றென்றும் இவ்வுடலே உயிரென்றும் கூறுவர். அவர் சூன்ய ஆத்மவாதிகள்.

2. நம்மிடத்துள்ள ஐந்து இந்திரியங்களே உயிரென்பர் சிலர். சில சமயங்களில் இவ்வைந்து இந்திரியங்களும் ஒன்று சேர்ந்து வேலை செய்கின்றன; சில சமயங்களில் ஒன்று சேர்வதில்லை. அதனுல் இந்திரியத்தை உயிர் என்பது தவறு. இவ்வாறு இந்திரியமே உயிர் என்போர் இந்திரிய ஆத்மவாதிகள்.

3. சூக்கும ஆத்மவாதி சரீரத்துக்கு உள்ளே உள்ள சரீரமே உயிர் என்பன். அது சூக்குமம், காரணம் என இரு வகைப்படும்.

4. சூக்குமதேக ஆத்மவாதி சூக்கும தேகமே உயிர் என்பான். அஃது எட்டாலாயது. அதன் பயனாக கனாக்கள் உண்டாகின்றன. சில நாட்களுக்குப் பின்னர் கனாக்கள் மறக்கப்படுகின்றன. எனவே இவர்தம் கூற்றும் பொய்யாகிறது.

5. பிராணாத்மவாதி நம்முள் உள்ள பிராணவாயுவே உயிர் என்பான்.

6. விஞ்ஞான ஆத்மவாதி உணர்வே உயிர் என்பான். விழிப்பிலும் உறக்கத்திலும் உயிர் இருக்கிறது. ஆனால் உறக்கத்தில் உணர்வுஇல்லை. எனவே இவர்தம் கூற்றும் பொய்யாகிறது.

7. சமூக ஆத்மவாதி அழியாததெல்லாம் உயிர் என்கிறான். உடல் அழிவது.

8. அந்தக்கரண ஆத்மவாதி மனம், சித்தம், புத்தி, அகங்காரம் முதலியவையே உயிர் என்கிறான். இவற்றில் ஒன்று செய்யும் காரியத்தை இன்னொன்று செய்வதில்லை. எனவே இதுவும் பொய்யாகிறது.

சிவஞான சித்தியாரின் மூன்றாஞ்சூத்திரம் உயிரைப் பற்றி கூறுகிறது. அது வருமாறு:—

“உயிரெனப் படுவதிந்த வுடலின்வே றுளதாயுற்றுச்
செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடையதாகிப்
பயில்வுறு மின்பத்துன்பப் பலன்களு நுகரும் பார்க்கிற்
றுயிலொடு மைந்தவத்தைப் படுமுண்மை துரியாதீதம்.

பஞ்சகிருத்தியம் நடைபெறுதல்

அரசனுக்கு மந்திரியில்லாவிட்டால் பிரயோசனம் இல்லை. உள்ளம் மந்திரி; உயிர் அரசன். உள்ளம் இல்லாவிட்டால் உயிர் இயங்காது. அரசனைச்சூழ்ந்து பலர் இருப்பர்; அவர்களுக்குள் படிப்படியாக ஏற்றத்தாழ்வு உண்டு. அதுபோல

உயிரைச்சுற்றி ஐந்து அவத்தைகள் இருக்கின்றன. அவற்றில் மூன்று காணப்படுவன; இரண்டு காணப்படாதன. விழிப்பு, கனவு, தூக்கம் ஆகிய மூன்றும் காணப்படுவன. துரியம், துரியாதீதம் என்பன காணப்படாதன. நன்றாகத் தூங்கும்நிலை துரியநிலை; சுகமாகத் தூங்கும்நிலை துரியாதீத நிலை. இவ்வைந்து அவத்தைகளோடு மும்மலங்களும் உயிரைச்சூழ்ந்து நிற்கின்றன. இவற்றால் உயிர்படும் கஷ்டங்கள் எண்ணில. இத்துன்பத்தைக்கண்டு ஆண்டவன் தயையுடையவனாகிறான்; உயிரின் கஷ்டத்தைப்போக்க உயிரை நோக்கி வருகிறான். அப்படிவரும் நிலையிலேயே பஞ்சகிருத்தியங்கள் நடைபெறுகின்றன. இதையே மணிவாசகனார் திருவெம்பாவையில்,

"போற்றி யருளுக நின்னாதியாம் பாதமலர்
 போற்றி யருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
 போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லா வுயிர்க்கு மீறா மிணையடிகள்
 போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
 போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்."

என்னும் பாட்டில் கூறுகிறார். இவ்வாறு ஆண்டவன் வரும்கோலத்தையே உத்ஸவம் என்கிறோம். இவ்வுண்மையை

"ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடும்
 தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
 காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும்பேசி வளைசிலம்ப வார்கலைக
 ளார்ப்ப ரவஞ்செய்ய வணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந் துடையான் பொற்பாத
 மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்"

என்னும் திருப்பாடலாலும் மணிவாசகனார் விளக்குகிறார்.

உத்ஸவம்

இனி தற்கால உத்ஸவங்களில் இப்பஞ்ச கிருத்தியங்களும் நடைபெறுகின்றனவா வென்பதைக் காண்போம். செய்கைகளில் இருவிதம் உண்டு. ஒன்று ஆத்மார்த்தம்; மற்ளுென்று பரமார்த்தம். தன் ஆத்மாவின் உயர்வுக்காகச் செய்யும் முயற்சி ஆத்மார்தத்தின்பாற்படும். பிறர் நன்மைக்காகச் செய்தல் பரமார்த்தமாகும். ஆண்டவனுடைய பஞ்ச கிருத்தியம் பரமார்த்தத்தின்பாற்பட்டதே.

உத்ஸவத்தில் முக்கிய அம்சங்கள் நான்கு. அவை. பூசோதனை, பிரதிட்டை, பூசை செய்தல், பிராயச்சித்தம் என்பன. இவற்றில் பூசை மூன்றுவகைப்படும். அவை நித்திய பூசை, நைமித்திக பூசை, காமிகபூசை எனப்படும். முதல் இரண்டு பூசைகளும் பொதுவாகச் செய்யப்படுபவை.

உத்ஸவத்துக்குத் தமிழில் சிறப்பு என்று பெயர். திருக்குறளிலும் திருவள்ளுவர்,

> "சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
> வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

என்று கூறியிருத்தல் காண்க. சிறப்பு என்பதற்கு விழவு என்று பரிமேலழகர் பொருள் கூறினர். நித்தியத்தின் தாழ்வுதீரச் செய்வதே நைமித்திக பூசை என்று அவர் கூறுகிறார். பஞ்சபர்வம் என்பது மாத உத்ஸவம். பஞ்சகிருத்தியமாக உத்ஸவம் செய்வதே சிறப்பு.

அங்கங்கள்

உத்ஸவத்தில் பதினெட்டு செயல்கள் நிகழ்கின்றன. அவை வருமாறு:—(1) ரிஷப பூசை. இது விருஷப யாகம் என்றும் கூறப்படும். (2) கொடியேற்றல். (3) பிரஹத்தானம் (4) மிருத்சங்க்ரஹணம், மண்கொண்டுவருதல்; விதை

போடுதல்; அவைமுளைத்தல் முதலிய சிறப்புக்கள். (5) யாகசாலை (6) அஸ்திரம். இதற்கு ஆறு அங்கம் என்று பெயர்; ஷடாங்கமந்திரம் என்றும் கூறப்படும். இப்பூசையில் அங்கங்களைத் தொட்டுப் பார்த்தல் விரோதமின்மையைக் காட்டுகிறது. அதுபோது சிறிய மேளம் உபயோகிக்கப்படும். (7) பலிதானம். பிண்டம் போடுதல் (8) யானக்கிரமம். இதுவாகனக் கிரமம் என்றும் கூறப்படும். (9) பரிவேடம். (10) நிராதனை. இதை ஆலத்தி என்றும் கூறுவர். (11) கௌஸ்துபம். இது சந்தோஷத்தைக் குறிப்பது (12) தீர்த்தசங்கிரஹணம். இதுநீர் கொண்டுவரல் எனப்படும். (13) சூர்ணோத்ஸவம். இதற்குப் பொற்சுண்ண விழா என்றுபெயர். இவ்விழாவில் வாசனைப்பொடிகள் உபயோகிக்கப்படும். (14) தீர்த்தம். (15) அவரோகணம் (கொடியிறங்கல்) ருக்என்ற பதத்துக்கே வளர்த்தல் என்று பொருள் (16) ஸ்தாபனம். (தனியாகப் பூசித்தல்) (17) விவாகம். (18) அடியார்களைப் பூசித்தல்.

உத்ஸவத்தில் பஞ்சகிருத்தியம்

பொதுவாக அங்குரம், துவஜாரோகணம் முதலியன சிருஷ்டியின்பாற்படும். வாகனம், பலி முதலியன ஸ்திதி. ரதோத்ஸவம் சங்காரம். மௌன உத்ஸவம் திரோதானம். இது அகாலத்தில் செய்வது. ஊடல் உத்ஸவம் அனுக்கிரகத்தின் பாற்படும். ஊடல் விரோதமன்று.

> "ஊடுதல் காமத்திற் கின்ப மதற் கின்பங்
> கூடி முயங்கப் பெறின்"

என்று திருவள்ளுவனார் கூறுகிறார். 'கலவி வித்திக ஊடி' என்பது திருவிளையாடற் புராணம். சக்தி ஊடல் அனுக்கிரகத்தின் பாற்பட்டது. விசேஷ ஞானத்தையே சொரூபமாக உடைய மாதாவுக்குச் சக்தி என்று பெயர். ஈஸ்வரன் வழி

உமை நிற்பள். சக்தியும் சிவமும் கூடினுல் உயிர்களுக்கு இன்பம் உண்டாகும்.

வெள்ளிக்கிழமைதோறும் சுற்றிவருவது பராசக்தி. மூலஸ்தானத்தில் இருப்பது ஆதிசக்தி. சர்வேசுவரனே சிருஷ்டி காரணமாகச் சக்தியாகிருன். சிவம் என்பதே உண்மை உருவம். சிவம் என்பது தொழிற் பெயர். அவன் நம்மோடு கூடும்போது அவனுக்குப் பதி என்று பெயர். இதை விளக்குவது சித்தியாரின் இரண்டாஞ் சூத்திரம்.

முன்காலத்தில் எல்லா ஊர்களிலும் விழாக்கள் நடந்தன. இது திருமுருகாற்றுப்படையிலுள்ள "ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழவினும்" என்ற அடியால் விளங்குகிறது. ஊர் ஊர் என்பதற்கு ஒவ்வொரு ஊர் என்று பரிமேலழகர் பொருள் கூறினர். அதனல் ஒவ்வொரு ஊரிலும் விழா உண்டு என்பது ஏற்படுகிறது.

அறுவகை விழா

அவ்விழா ஆறுவகையாகக் கொண்டாடப்பட்டது. நாட்களிலும் வித்தியாசம் உண்டு. ஒரு நாள் உற்சவமும் உண்டு. இஃது அரசனின் நன்மை கருதிச் செய்வது. மூன்று நாள் விழா சாத்விகமானது; சிவனைச் சந்தோஷிப்பது. ஐந்து நாள்விழா பார்த்திபம் என்பது. இதுபோகத்தை உண்டாக்குவது. ஏழுநாள் உத்ஸவம் ஸ்ரீகரம். இதைச் சிவப்பிரியம் என்றும் கூறலாம். ஒன்பது நாள் உத்ஸவம் சௌக்கியம் என்னப்படும். அது சாந்தத்தைக் குறிப்பது. பன்னிரண்டு நாள் உத்ஸவம் பைத்ரிகம். இது முக்தியின் பயனைக் குறிப்பது. இந்நாட்களின் வித்தியாசமே அறுவகை உத்ஸவம் என்னப்படும்.

திருவாரூர்போன்ற இடங்களில் இருபத்தொரு நாட்கள் வரை விழா நடைபெறுகிறது. திருப்பெருந்துறைப் புரா

ணத்தில் புரூரவன் ஏழுநாள் விழா செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

உத்ஸவத்தின் பயன்

இனி உத்ஸவத்தின் பயனைக் காணல் வேண்டும். உத்ஸவ காலத்தில் எல்லாரும் ஒருவித வித்தியாசமின்றிக் கடவுளைத் தரிசிக்கலாம். ஜாதிப் பேய் அங்குத் தலைகாட்டாது. இதைச் சேக்கிழார் பெருமான் நமிநந்தியடிகள் புராணத்தில்,

"தேவர் பெருமா னெழுச்சி திருமணலிக் கொருநா ளெழுந்தருள
யாவரேன் னுதுடன் சேவித் தெல்லாக் குலத்திலுள்ளோரு
மேவ வன்பர் தாமுடன் சேவித் தணைந்து விண்ணவர்தங்
காவலாளர் ஒலக்க மங்கே கண்டு களிப் புற்றார்"

என்ற செய்யுளில் கூறியிருக்கிறார்.

தரிசனம் செய்யும்முறை

எவ்வாறு தரிசனம் செய்ய வேண்டுமென்பதையும் கூறுதல் அவசியம். "ஆள் அடையாளத்திற்குத் திருநீறிட்டுச் செல். வீபூதியைக் கைநழுவ விடாதே', யென்று தைத்திரீயோபநிஷத் கூறுகிறது. வியாஸபாரதத்தில் விபூதியைப் பற்றிக் கூறியிருக்கிறது. ஒரு சமயத்தில் பார்வதிக்கும் பரமசிவனுக்கும் ஒரு சம்பாஷணை நடந்தது. அதுபோது பரமசிவனார் "விபூதி என்னாலே அடியார்களுக்குக் கொடுக்கப்பட்டது" என்று கூறுகிறார். பதின்மூன்று உபநிஷத்துக்களில் விபூதியைப் பற்றிக் கூறியிருக்கிறது. பூதி என்பதற்கு ஐஸ்வரியம் என்று பொருள். பிரமசாரிகளும் விபூதியை அணிதல் வேண்டுமென்று போதாயன சூத்திரம் கூறுகிறது. உத்ஸவத்துக்குச் செல்லும்போது சிறப்புப் பொருந்திய விபூதியைஅணிந்து செல்லல் வேண்டும்.

இரண்டாவதாக உருத்திராக்கத்தை அணிந்து செல்லல் அவசியம். உருத்திராக்கத்திற்குக் கண்மணி என்று

வேறு பொருள் உண்டு. தற்கால அறிஞர்களும் உருத்திராக்கத்தில் வியாதியைத் தீர்க்கும் குணம் இருப்பதாகக் கூறுகிறார்கள். பதின்மூன்று வருஷங்களுக்குமுன் கள்ளிக்கோட்டையில் ஒருவருக்கு உருத்திராக்கம் இழைத்துக் கொடுக்கப்பட்டதாம். அவரைப் பீடித்திருந்த தீராத நோயொன்று தீர்ந்துவிட்டதாம். எனவே விபூதி உருத்திராக்கத்தோடு விழா நாளில் ஆண்டவனை வணங்கினால் நாம் பெரும்பேறு பெறலாம்.

மட்குடமும் பொற்குடமும்

[K. கோவிந்தன்]

திருவாசகமும், தெய்வவாசகமும், செவ்விதின் உணர்ந்த செந்நாப் புலவர், சீரிய அன்பர், சிவப்பிரகாசம் என்னும் செம்மல், கொடுப்போர்க் கிரப்போரில்லா குறையொன்றன்றி வேறில்லா வளநகர் ஒன்றின் உள்ளே செல்வார், நெறியில் நீர்நிறை ஊருணி யொன்றைக் கண்டார்.

ஆங்கு, நிறைகுடம் தாங்கிய மங்கையர் ஒருசிலர் நீர்த்துறை தோறும் நீர்திரட்டுவதையும், அவருள் ஒருசிலர் பொன்னாலியன்ற குடமும், பலர் மண்ணாலியன்ற குடமும் உடையராதலையும், இளமையியல்பால் மட்குடம் ஒன்று உடையப்பெற்ற பாவை யொருத்தி, உடைந்து அஃது ஆண்டேயொழியத் தமியளாய் வீடுநோக்கிச் செல்வதையும், பொற்குடம் ஒன்று உடையப் பெற்றவள் உடைந்த அதனையும் உடன்கொண்டேகுவதையும் கண்டார் அவ்வன்பர்.

அவணின்றும், நகரின் ஊடேசென்று வீதியில் உறையும் மாந்தர்தம் செயலையும், மணிமாடங்களையும் பார்த்துக்கொண்டே செல்வார், இல்லந்தோறும், சிவவேடம் பொலிந்த

தொண்டர் பலர், ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல் வாய் மலர்ப் பிறந்த வாசகத்தேனைக், கண்கள் தொடுமணற்கேணி யிற் சுரந்து நீர்பாய, மெய்ம்மயிர் பொடிப்ப, நெஞ்சம் நெக்குருகப் பாடிக், கேட்டார்க்கும் பேரின்பம் உண்டாக்கித் தாமும் தெவிட்டாத பேரின்பம் உறுதலையும் கண்டு கொண்டே செல்வார், பொற் கொல்லர் வதியும் வீதியின் மருங்கே செல்லுழி, உடைந்த பொற்கலம் உடன்கொண்டு சென்ற அப்பாவை, பொன்செய்கொல்லன் ஒருவன்பால் நண்ணி, உடைந்த அதனைப் பழையது போன்றே பண்ணிக் கொண்டு வருதலையும் கண்டார்.

இறுதியில் வேதமோதும் பார்ப்பனர் வீதியும் செல் வார், ஆங்கு, ஆங்குறையும் பார்ப்பனருள்ளும் பலர் ஒழிய ஒரு சிலர் மாட்டில், மலர்ந்த முகமும் நீர்வார் விழியும் இல ராய், கேட்பார் அற்றும், கேட்பார் ஒரு சிலர் தாமும், வெறுக்கும் இயல்பின், வேதமோதுவதனையும் கண்டார்.

பின்னர், அவ்வூரின் நீங்கி, வேற்றூர் செல்லுதற்கு முன்னர், ஆங்குசெல் வருத்தம் தீர, ஓரிடத்தில் அமர்வா ராயினர் அமர்ந்த அவ்வன்பர், அவ்வூரில் நிகழ்ந்த நிகழ்ச்சி கள் அனைத்தையும் உளத்திடைக் கொண்டு உள்ளுவாராயி னர். உடைந்த மட்கலம் உடைந்தது உடைந்ததே; மீண்டும் வாரா இயல்பினதாயிற்று. மற்றவ் வுடைந்த பொற்கலம், பொன்செய் கொல்லன் தன்னால் மீண்டும் தன்னுரு வடைந் தது. மட்கலம் யாவரானும் எளிதில் கையாளப் பெறுகின் றது. பொற்கலமோ எனின், செல்வர் ஒரு சிலராலேயே கையாளப்படுகின்றது. வாசகம் ஓதுவார், மீண்டும் வாராவழி சென்று, என்றும் விடாத வீடெய்தி இன்பம் உறுவாராயி னர். வேதம் ஓதுவார், அந்நெறி பற்றிப், பொன்னுலகெய்தி, வினைப்பயன் நுகர்ந்து, வினையுலப்ப மீண்டும் மண்ணுலகம்

நண்ணி வாழ்வாராயினர். வாசகம், யாவரானும் ஓத உரிமையுடையது. வேதமோ எனின், அந்தணர் ஒருவராலேயே ஓத உரிமையுடையது. ஆதலின், மட்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை. மதுர வாசகம் பொற்கலம் நிகர்க்கும்.

இப்பரந்த கருத்தினை ஓர் அழகிய கவி ஓவியத்தின் மூலம் உலகிற்குக் காட்டுவாராயினர். அதனைக் கீழே காண்க.

“ திருவார் பெருந்துறைச் செழுமரக் குருந்தின்
நிழல்வாய் உண்ட நிகரில் ஆனந்தத்
தேன்தேக் கெறியும் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத்து; ஆகலின்,
பொற்கலம் நிகர்க்கும் ; பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் ; மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்;
வேதமோதின் மெய்ப்பயன் அறமே.”

மதுரவாசகம், யாவரும் ஓதும் இயற்கைத்து ஆகலின், பொற்கலம் நிகர்க்கும்; பூசுரர் நான்மறை மட்கலம் நிகர்க்கும். மதுரவாசகம் ஓதின் உறுபயன் முத்தி; வேதம் ஓதின் மெய்ப்பயன் அறம் என வினைமுடிபு செய்க.

உருவ வழிபாட்டின் உள்பொருள்

[S. A. அமிர்தகடேசுவரன் பிள்ளை, வேளாங்கண்ணி]

‘ஆலயந்தொழுவது சாலவும் நன்று’ என ஔவைப் பிராட்டியார் அருளியது யாவரும் அறிந்த தொன்று. ஆன்மாவின் மாசுநீங்கி இறைவன் திருவடி நிழலில் என்றும் இன்பம் துய்க்கவேண்டியதற்கான சாதனங்கள் பலவற்றுள்ளும் ஆலயவழிபாடு தலைமை சார்ந்தது என்பதை யாவரும் ஒப்

பாதிரார். எனினும் நாடோறும் திருக்கோயில் புக்கு சச்சிதானந்த சிவத்தைப் பணிந்து அருள்பெற விரும்புவோர் ஒரு சிலரேயாவர். மற்றையோர் 'கோவிலிற்றான் கடவுளர் இருக்கின்றாரோ, கடவுள் எங்கும் நிறைபொருளாதலின் நாமிங்கிருந்தபடியே வணங்கிவிடலாம்' எனக் கூறுவதோடமையாது சிவவாக்கியர் முதலிய பெரியாரின் பாடல்களில் பலவற்றைச்சான்றுகளாக எடுத்துக் காட்டித் தாம் திருவருளுக்குப் பாத்திரராகாமற் போவதோடு பிறரையும் தடுத்துப் பிறவிக்குழியில் வீழ்ந்து வருந்துகின்றனர். என்னே! இவர்கள் பேதைக் கூற்று! 'சிவவாக்கியர் தாம் எந்நிலையில் நின்று இவ்வருஞ் செய்யுட்களில் இவ்விடயங்களைக் கூறினார்? அதுயாருக்கு உரித்தானது? கணப்போதும் சிவசிந்தனை செய்யவிடாதவாறு ஆக்கிவிடும் குடும்பக்கடலில் கிடந்திளைப்பவர்கட்கா? அன்றி முற்றுந்துறந்து சிவானுபூதி ஒன்றையே இலட்சியமாகக் கொண்டதால் தற்போதம் நீங்கி சிவமாந் தன்மை எய்திய சீலர்கட்கா' என்று உன்னுவோர்க்கு இஃது தெற்றென விளங்கும்.

"ஆலயந்தொழு அறந்தலை நிரப்புதல் லருச்சனை புரியென்றே
ஓலமிட்டு நான்மறையெலாமுரைப்பது உலகரைக்குறித்தன்றே
மூலகாரணபராம்பர சூக்கமாய் முழுதையும் காணெனுச்
சீலமுற்றிய அறிஞரைக் குறித்துரைசெய்தது அம்மறையன்றே"

என்னும் பாவையும் நன்றாயுன்னுக.

சின்னஞ்சிறு குழந்தைகளை நாம்பாடசாலைக்கு அனுப்பி வைத்தால் ஆங்கு ஆசிரியர் பலதிறப்பட்ட உருவங்களைக் காண்பித்தும், அக்குழந்தைகளின் மனப்பான்மைக் கேற்பக் கதை வாயிலாகவும், நாடகமாக நடித்துக் காட்டியும், பெரிய பெரிய எழுத்துக்களால் சிறு சிறு வார்த்தைகளை எழுதிக் காட்டியும்,பல நாட்கள்வரை எடுத்துக்காட்டி வாசிக்கச் செய்தும் காட்டுவது அக்குழந்தையின் அறிவு அத்துணை பக்குவ

மூறு திருத்தலின் காரணத்தாலன்றோ ! பின்னர் அக்குழந்தைகள் இவ்வித உபகரணங்களின்றித் தாமே எழுதவும் படிக்கவும் கற்றுவிடுகின்றனர். மிகக் கற்றுத் தேர்ந்த ஒருவனுக்கு இக்காட்சிகள் எவ்விதம் தோன்றும் என்பதை உன்னுவோமாக. அதைப்போல் சரியையாதிகளைக் கடந்த சிவஞானிகட்கு நாம் செய்யும் கீழ்தரப்பட்ட வணக்கங்களும் செய்கைகளும் அலட்சியமாகவே தோன்றும்.

"விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர்க் காய்கனிபோ லன்றோ பராபரமே"

என்னும் தாயுமானர் திருவாக்கும் நோக்குவாம். நிலமகட்கு ஆடைபோன்று திகழும் சமுத்திரத்தைத் தான் பிறந்ததிலிருந்து கண்டிராத ஒருவன் அக்கடலைக் கண்டவனிடம் அன்னதின் தன்மையைக் கேட்டபோது பின்னவன், கடல் இவ்வளவு பரப்புள்ளதென்றும், அதில் இன்னின்ன பொருட்கள் ஜந்துக்கள் மற்றைத் திரவியங்களுண்டென்றும் அதன் நீர் உவர்ப்புடைத்தென்றும் அதில் பல ஆறுகள் வீழ்கின்றனவென்றும் இன்னும் பலவாறுகக் கடலைப்பற்றி எடுத்தோதினும் கேட்பவனுக்குச் செவியளவில் உறையுமேயன்றி அதன் முழுவிபரமும் தானே நேரில் கண்டாற்றான் இவன் மனம் அமைதியடையும். இறைவனின் தடத்த இலக்கணங்களும் பிறவும் பாலில் நெய்போல் மறைந்திருப்பதால் ஆலயத்திலுள்ள உருவம் கடவுளின் தத்துவங்களைத் தயிரில் நெய்போல் விளக்கிக் காட்டுகின்றது. தூலமாக ஒரு பொருளை முன்னாலேயே தெரிந்திருந்தாற்றான் சூக்குமமாகப் பிறகு அதைப்பற்றி ஆய்ந்து தேர்ந்து தெளியக்கூடும்.

"ஆலத்தின் உடுக்கள் காட்டி அருந்ததி காட்டு வார்போல்
தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டு வார்போல்
தூலத்தை முன்பு காட்டி சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னரே."

ஆதலின் ஆலய வழிபாட்டின் உட்பொருளும் இதுவேயாம். கடவுள் ஒருவர் உண்டென்ற குறிப்பை ஆலயத்துள்ள உருவங்களில் பதித்து வணங்குவோர் ஒரு பகுதியினரும், அவ்வுருவமே கடவுள் என்று உறுதியாக நினைத்து வணங்குவோர் மற்றொரு பகுதியினருமுண்டு. பின்னையவரைவிட முன்னையவரே தேர்ந்த அறிவாளிகள் என்பது சான்றோர் கொள்கை. ஒரு கடைத்தெருவில் குழந்தைகள் விளையாடும் சாமான்களை வைத்துவிற்குமிடத்து வாழைச்சீப்புகள்உண்மையான வாழைக்கனியையே குறிப்பிடுகின்றன. அதுபோலவே திருக்கோயில்களில் விளங்கும் உருவங்கள் உண்மையான கடவுளின் தத்துவத்தை உணர்வதற்கு ஞாபக மூட்டுகிறதேயொழிய வேறில்லையாம். ஒருவன் உருவச் சிலைகள் விற்கப்படும் கடையிலுள்ளதொரு கனியை உண்ண இச்சைப் பட்டால் எவ்வளவு பயன் படாதோ, அதுபோலவே, ஒருவன் ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களையே கடவுள் என்று வழிபடுவதால் மட்டும் வீடு பேறடையக் கூடுமென நினைப்பது இயலாது. செடி முதிர்ந்து மரமாவதற்குள் அதனை மற்றப் பிராணிகள் தீண்டாவண்ணம் வேலிகோலிவைத்தல்எவ்விதம் அவசியமோ அவ்விதமே சிவத்தின் உண்மைத் தத்துவத்தையுணர்ந்து கொண்டு சிவஞான மடைவதற்கு ஆலயமும் மற்ற அநுட்டானமுறைகளும் வேலிபோன்றவைகளாம். மரம்முதிர்ந்து விட்டால் வேலி அதற்கு அவசியமின்று. அவ்வண்ணமே கடவுளின் வியாபக அறிவு அடைந்தவொரு சிவஞானிக்கு ஆலய வழிபாடும் மற்றவைகளும் முக்கியமாக வேண்டப் படுவன ஆகாவாம். ஆகையால் நமது முன்னோர்கள் இவ்வரிய கருத்துக் கொண்டே ஆலயங்களை நிறுவி இருக்கின்றனர். ஆதலால் சிவஞான மடையப் பக்குவமுறும் நிலையிலிருப்பவர்கட்குக் கோவில் வழிபாடு மிக வேண்டப் படுவதேயாம்.

இதனைச் சிவஞானபோதம் 12-ம் சூத்திரத்தில்:

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே.

எனத் திருவாய்மலர்ந்தருளி யுள்ளார். இது பற்றியே, ஒருவன் காலையில் ஆலயம் சென்று வழிபடில் அன்று செய்த பாவமும் மாலைக் காலத்தில் வழிபடில் பிறவிகடோறும் செய்த கொடும் பாவமும் தீருமெனச் சிவாகமங்கள் சாற்றுவதன் காரணங்களை உய்த்துணர்வோமாக.

எ ச் ச ம்

[திரு. அ. நெல்லையப்ப பிள்ளை]

சித்தாந்தம் மலர் 10. இதழ் 4ல் பக்கம் 210. திருவாளர் துடிசைகிழார் அ. சிதம்பரனார் இந்தச் சொல்லானது திருக்குறளில் ஐந்து இடங்களில் வருகிறது என்று சொல்லுகிறார்.

1 தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

2 வசைஎன்ப வையத்தார்க் கெல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின்.

3 வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

4 அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது.

5 எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்.

இதைத் தவிர இச்சொல் (எச்சம்) வேறு இரண்டு இடங்களிலும் வருகிறது. அதாவது:—

1 மனத்தூயார்க் கெச்ச நன்றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை.

2 ஊணுடை யெச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

திரு. சிதம்பரனார் அவர்கள் முதலாவது எடுத்துக் காட்டிய குறளிலுள்ள எச்சம் என்பதற்கு உரை உலக அனுபவத்திற்குப் பொருத்தமிலது என்று அதற்குக் காரணம் சொல்லுகிறார். அதுவும் காட்சியளவில் சிறிது சரியாக இருக்கிறது. அந்தக் குறளில் அந்த எச்சம் என்று மாத்திரம் சொல்லி யிருக்கிறது. அது நல்லது கெட்டது என்று மாத்திரம் ஒன்றும் சொல்லவில்லை.

நடுநிலைமையுடையவர்களுக்குச் சந்ததி உண்டாதலும் இல்லாதவர்க்கு அது இல்லாமாற் போதலும் நிச்சயமாதலின், அவ்விருவகையோர்களையும் அறிவதற்கு அடையாளங்களாவன.

திருவள்ளுவர் கருத்திற்கு ஏற்ப ஔவையார் இரண்டு இடங்களில் இச்சொல்லை உபயோகிக்கிறார்கள். அது கீழ் வருமாறு :—

உணர்வாழ் இருக்க ஊரார் பொதுவிருகா
காதலைதான் பேசி எண்ணவும் கைகள்தான்
தாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சமற மென்றா லறு.

வழக்குடை யான்நிற்ப வளயாளை கூட்டி
வழக்கை அழிழக்கு செய்தோன் வழக்கிழந்தோன்
சுற்றமும் தானும் தொடர்ந்தமுத கண்ணிகள்
எச்சமற மென்றா லறு.

காட்சிக்குப் பொருத்தமில்லை என்று சொல்வது 46வது அதிசாரத்தில் இப்பொழுது எடுத்து காட்டிய குறளைப் பார்த்தால் பொருத்தம் வெளிப்படை.

எச்சம் நன்ருயிருக்க வேண்டுமானல் நடுநிலைமை மாத்திரம் போதாது. மனத்தூய்மையும் இருக்க வேண்டும். இதுவும் உலகில் கண்கூடாகப் பார்க்கலாம். ஆகையால் பரிமேலழகர் உரை வெகு பொருத்தமாயுளது. (The noble and the wicked are known by the progeny.) This is not very exact translation of the குறள் in question; because எச்சம் only occurs. The progeny may either be good or bad. As our life is continued in that of our children it would seem indeed natural deduction from the simile of St. Paul as that of the grain is carried on in the plant of the following year." மனம் பரிசுத்தமாயிருந்தால்தான் சத் புத்திரர்களும் உண்டாகும்; இது விதி. (Rule) இரண்டாவது எடுத்துக் காட்டிய எச்சம் என்றதற்கு எஞ்சி நிற்கிறதற்கு ஒரு பெருஞ் செயல் செய்தவர் இறந்துபோக தான் இறவாமல் நின்றதாமாகையால் போல எச்சம் என்ருர்.

மூன்ருவது கொள்எச்சத்திற்கு குறை என்ற அர்த்தம்.

நான்காவது கொள்எச்சத்திற்கு ஒளிந்தான் என்ற அர்த்தம்.

ஐந்தாவது கொள்எச்சத்திற்கு ஒளிந்தான் என்ற அர்த்தம்.

ஆகவே திருவள்ளுவர் (Thiruvalluvar) எச்சம் என்ற மொழியைப் புத்திரன் என்ற பொருளில் முதலாவது எடுத்துக்காட்டிய பொருளில் வழங்கி யிருக்கிருர்.

பரிமேலழகர் உரை அதற்கு வெகு பொருத்தமாயிருக்கிறது.

“ வள்ளுவர், மெய்யன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே,
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை - தெள்ளியசீர்த்
தொண்டர் புராணம், தொகுசித்தி ஓராறும்
தண்தமிழின் மேலாந்தரம் ”—பழைய வெண்பா.

என் சிற்றறிவிற்குத் தகுந்தபடி கேட்டறிந்தமட்டில் நான் இதைப்பற்றி எழுதி யிருக்கிறேன். இதைப்பற்றி அறிவிற் சிறந்த பெரியோர்கள் தங்கள் கருத்தை வெளியிட்டது மிக நலமென்று எண்ணுகிறேன். பரிமேலழகர் உரையை அவர் காலத்திலிருந்த வேறு உரையாசிரியராகிய நச்சினர்க்கினியர் இவர் உரையை மெச்சி எழுதியிருக்கிறார். அப்படியிருக்க அவர் உரையைப் பொருத்த மில்லையென்று சொல்கிறது சரியாகத் தோன்றவில்லை. [இவ்வாராய்ச்சி இதோடு முடிவடையும்—பத்திராசிரியர்.]

வாகீச முனிவர் அருளிய

ஞானமிர்த மூலமும் விளக்கவுரையும்

[திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை,
திருவோத்தூர்]

அகவல். 9.

காரணம் கழறல் வேண்டுவல், ஆரணம்
அறியோன் அமலன் அதற்(கு) அத்த !
பொறிதீர் புற்கலன் விழுமலம் புணர்தற்கு ;
அற்றே சொற்ற(து) அநாதி, மற்றவர்க்கு
எற்றெனில், ஆதி இயையின், குற்றமில்
காரணம் கழறுவல், அம்ம, சீருணம்

திகழொளிப் பளிங்கு போலப் புகழரும்
இறைபுற் கலனுக்கு என்றனன், குறைவின்று
அறைகழல் அருள்ஒலி பரந்த
10. பொறைவளர் சாரல் அறவ னேனே.

இது சுத்தாவத்தையில், பசு, மலக்ஷயம் வந்து, நின்மலத்தைப் பெறும் என்றலால், பதி நின்மலனாதற்கும், பசு மலனாதற்கும் காரணம் வினவ, இவர்கட்கு நின்மலமும் மலமும் அநாதி சாதகம் எனக்கூறியது.

உரைமுடிபு:—அத்த! அறியோன் அமலன் அதற்கு, புற்கலன் விழுமலம் புணர்தற்கு, காரணம் கழறல் வேண்டுவல் (எனின்), சொற்றது அவர்க்கு அநாதி; எற்றெனின், அறவன், ஆதி இயைபின், காரணம் கழறுவல்; சீருணமும் ஒளியும் பளிங்கும் போல, இறைக்கும் புற்கலனுக்கும் (நின்மலமும் மலமும் அநாதி) என்றனன் என்க.

உரை:—அத்தனே, வேதங்களாலும் அறியப்படாதவனாகிய முதல்வன் அமலனாவதற்கும், அவ்வமைதியில்லாத ஆன்மா வருத்தத்தைப்பயக்கும் மலபந்தம் உடையனாதற்கும் காரணம் கூறியருள வேண்டும் என்று வினவின், அவ்வாறு சொன்னதற்குக் காரணம் அவர்கட்கு அவ்வமைதி அநாதி; அஃது எங்ஙனம் எனின், சப்திக்கின்ற தன் திருவடிச் சிலம்பின் அருளொலி குறைவின்றிப் பரவுதலால், எல்லாவுயிரும் பொறையாகிய தவத்தை மேற்கொண்டு வளரும் கயிலைமலைச் சாரலையுடைய அறிவனாகிய பரமாசாரியன், ஆன்மாவும் முதல்வனும் முறையே மலனும் நின்மலனுமாகியது ஆதியெனக் கருதப்படத்தக்க ஒரு காலத்தில் நிகழ்ந்ததாயின், அந் நிகழ்ச்சிக்குக் குற்றமில்லாத காரணம் ஒன்று கூறலாம்; கூறலாகாதவாறு, செம்புக்குக் களிம்பும், பளிங்குக்கு விளங்குகின்ற ஒளியும்போல, ஆன்மாவுக்கு மலமும், புகழ்தற்கரிய

முதல்வனுக்கு மலமில்லாமையும் அநாதியேவிளங்கின என்று அருளினன் - எ-று.

கடாவிடைகளால் அவ்வப்போது நிகழும் ஐய விபரீதங்களைக் கழறிக் கூறினலன்றிக் கூறப்படும் பொருள் தெளியவுணரப் படாதென்னும் முறைமை பற்றிக் "கழறல் வேண்டுவல்" (1) என்முன். இது மாணவன் கொண்ட ஐயம். ஆன்மாவும் முதல்வனும் அநாதியேயாக, அவருள் ஒருவர் மலமும், மற்றவர் மலமின்மையும் உடையராவர் என்றவழி, அவ்வாறுதற்குரிய காரணம் அறிதற்கு வேட்கை யெழுதல் இயல்பாகலின், "காரணம் சழறல் வேண்டுவல்" என்று வேண்டினன். ஆரணம் என்றவிடத்துச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. அறியான் என்பது செயப்பாட்டு வினைப் பொருண்மைக்கண் வந்த செய்வினை; ஈண்டுச் செயப்படு பொருண் மேனின்ற வினைப்பெயராயிற்று; "செயப்படு பொருளைச் செய்தது போலத் தொழிற்படக் கிளத்தல் வழக்கியல் மாபே" என்பது தொல்காப்பியம்.

அமலன், மலம் இல்லாதவன் அத்தன் என்பது அத்த என விளியேற்றது. பொறி, அமைதி அஃதாவது நின்மலனும் தன்மை. ஆன்மா, பசு, அணு, உயிர், புற்கலன், சீவன் என்பன ஒரு பொருட்கிளவி. விழுமம் பயக்கும் மலத்தை விழுமலம் (3) என்முர். விழுமம், துன்பம்; "எழுமை எழு பிறப்பும் உள்ளுவர் தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு" என்ருற்போல. ஆன்மா சுத்தாவத்தையில் "நின்மலத்தியையும் பின் மலத்தியையான்" (ஞா. 8. 40) என்றமையின். நின்மலனும் இயைபுடைய ஆன்மா மலமுடையனுதற்குக் காரணம் இருத்தல் வேண்டும் என்பது எய்துதலால், "பொறிதீர் புற்கலன் விழுமலம் புணர்தற்குக்" காரணம் வினவப்பட்டது.

இனி, மாணவன் எழுப்பிய வினாவிற்கு விடைகூறுகின்றாராகலின், சுருங்கிய வாய்பாட்டால் "அற்றே சொற்றது அநாதி"யென்றார். இது பிரதிஞ்ஞை. இதனைமேற்கோள் என்று கூறுப. இனி இம்மேற்கோளைச் சாதிப்பதற்கு இன்மையேது கூறுகின்றார். ஒருகாலத்து ஒரு பொருட்குப் பிறிதொரு பொருளோடு புணர்ப்பு எய்துமாயின், அக்காலத்து அஃது அங்ஙனமாதற்கு ஒரு காரணம் கூறுவது அமையும்; அக்காலத்துக்கு முன் இயற்கையாயிருந்த அப்பொருள், பிறிதொன்றோடு இயைந்த வழிச் செயற்கைப் பொருளாதலின், அச் செயற்கைக்குக் காரணம் உளதாவதாயிற்று. ஆகவே, "செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்" என்றும், "ஆக்கந்தானே காரணமுதற்றே" என்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலால், காரணம் கூறப்படுமென்பது இலக்கணமாகலின் "ஆதி இயைபின் குற்றமில் காரணம் கழறுவல்" என்றார். ஆதியெனக் காலவரையறை கூறலின், அதற்கு முன்னதாகிய கால முண்மைபெற்றாம். சேர்க்கச் சேரும் செய்கையின்மைகாட்ட இயையின் என்றார். இயையின் என்றதனால் ஆதியில் இயையாமைதுணியப்படும். ஒரு மேற்கோளைச் சாதிப்பதற்குக் கூறப்படும் காரணத்துக்கு வகையால் மூன்றும் விரியால் இருபத்தொன்றுமாகக் குற்றவகை உண்மையின், குற்றமில் காரணம் எனச் சிறப்பித்தார். "ஏதுப்போலி ஒருமூன்றாய் விளங்கும் எழுமூன்றாகும்" (சிவ. சித்தி. அளவை. 14) எனச் சான்றோர் கூறுதல் காண்க. இவற்றின் விரிவைச் சிவஞானசித்தி உரையால் உணர்க; ஈண்டு விரிப்பிற் பெருகும். இதுகாறும் கூறியது ஏது. இனி, எடுத்துக்காட்டு (திருஷ்டாந்தம்) கூறுவார், "சீருணம் திகழொளிப் பளிங்குபோல" (6 - 7) என்றார். திகழொளி என்பதனைச் சீருணத்துக்கும் கூட்டுக; களிம்பு நீங்கியவழி அதன்பாலும் ஒளிதிகழ்தல் உண்டு. திகழொளிச் சீருணம் என்பது களிம்பில் வழியாதல்காட்டி, அதற்குக் களிம்புண்மை தெரித்தவாறு. ஆகவே, சீருணத்துக்குக் களிம்பும், பளிங்குக்கு ஒளியும்போல என்றவாறும் என்றது, இறைக்கும் புற்கலனுக்கும் மலவியைபு. பளிங்கும் ஒளியும், செம்பும் களிம்பும்

போல அநாதி என்றவாறு. "உலகெலாம் உணர்ந்தோதற்கரிய வன்" என்பவாகலின், "புகழரும் இறை" என்றார். நான்க னுருபு விகாரத்தால் தொக்கது. இதுவும் ஆப்தமொழி யென் பார் என்றனன் என்றார்.

அருள் ஒலி, குறைவின்று பரந்த சாரல், பொறைவளர் சாரல், அறவன் என இயையும். கழல் அசைக்கப்பெற்ற திரு வடி திருவருள் நிலையமாகலின், அவ்விடத்தே எழும் ஒலியும் அருள் ஒலி எனப்பட்டது. அவ்வருளொலி, கேட்ட ஆன் மாவைப் பிரியாது நிற்கும் வினைத்தொடர்பு முற்றும் பிரிவிக் கும் சிறப்புடையது என்பவாகலின், அதனை, "அறைகழல் அருளொலி" என விசேடித்தார். "கழலாவினைகள் கழற்றுவ காலவனங்கடந்த, அழலாரொளியன காண்க ஐயாறன் அடித் தலமே" என நம் நாவரசப் பெருந்தகை கூறியருளுமாறு காண்க.

ஒரு நீர் நிலையிற் கல்லொன்றை எறியின், அதனால் அலைகள் எழுந்து, அந்நீர் நிலைமுற்றும் பரவுதல் போல, ஓரி டத்தெழுந்த ஒலி, நாற்புறமும் பரவுமென்பது அறிவு நூற் றுணிபு. ஆயினும், நீரலைகள் தொடக்கத்தே பெரியவாய்ப் பின், நீர்ப்பரப்பிற் பரவப் பரவச் சிறுத்துப் போதல்போல, ஓசையும் சேய்மையிற் பரவப் பரவ, ஓசையளவு குறைந்து போகும்; ஆனால் பரமனது "அறைகழல் அருளொலி" அவ்வாறு குறைதலின்றி, ஆன்மப் பிரபஞ்சம் பரப்பு முற் றும் ஒரு தன்மைத்தாய்ப் பரவும் என்னும் சிறப்புத்தோன்ற "குறைவின்று பரந்த" என்றார். இன்றியென்னும் வினையெச் சத்திறுதி உகரமாய் வந்தமையின் இயல்பு முடிபு எய்திற்று. "இன்றி யென்னும் வினையெஞ்சிறுதி, நின்ற இகரம் உகர மாதல், தொன்றியல் மருங்கிற் செய்யுளுள் உரித்தே" என் பது தொல்காப்பியம்.

உற்ற நோய் நோன்றல் பொறையாகலின், அதனை யுடைய தவமுனிவர் வாழும் கயிலைமலைச் சாரலை, "பொறை வளர் சாரல் என்றார். பொறை, மலையுமாகலின், பொறை வளர் சாரல் என்றற்குக் கயிலைமலைச் சாரல் எனினுமாம். மலையிடத்து வாழும் பரமனை, "பொறை வளர் சாரல் அற

வன்'' என்றதனுல், வினைச் சார்புகெட வொழுகும் மெய்யுணர்வுடையார்க்கு, விளங்கிய சார்பாகும் பெரியோன் நம் பரமாசாரியன் என்னும் குறிப்பும் பெறப்படுமாறு காண்க. அறவனுன் என்புழி, அன், சாரியை; செய்யுளாகலின், ஆ, ஓவாயிற்று. ஏகாரம், ஈற்றசை.

இதுகாறும் கூறியவாற்ருல், இத் திருவகவற்கண், "பதி மலமில்லாதவன், ஆன்மா மலமுடையன்'' என்றது கேட்ட மாணவன், "அவ்வாறு ஆதற்குக் காரணம் வேண்டும்'' என்ருனுக, ஆசிரியர், "பதியும் ஆன்மாவும் அவ்வியல்பினரானது அநாதி; ஆதியாயின், அதற்குக் காரணம் கூறமுடியும்; பளிங்குக்கு ஒளியும், செம்பிற்குக் களிம்பும் அநாதியே இயைந்திருப்பதுபோலப் பரமன்பால் மலமின்மையும், ஆன்மாவின்பால் மலமுண்மையும் அநாதியே இயைந்தன என்று பரமாசாரியன் அருளியுள்ளான்'' என்கின்ருராம்.

திரு. ஆ. அ. இரத்தினசபாபதி முதலியார்

பெங்களூரில் நமது சமாஜ விசேஷ மகாநாட்டை மிகச் சிறப்பாக ஒப்பற்ற ஊக்கத்தோடு நடத்திய அன்பர். கணபதி விலாச சபையையும் இருபத்தைந்து ஆண்டுகளாக நடத்தி சைவத் தொண்டு புரிந்து வருகிருர். இவர் நீடூழி வாழ்க.

அப்பரும் யாக்கையும்

[கா. போ. இரத்தினம்]

"அறப்பெருஞ் செல்விபாகத் தண்ணலஞ் செழுத்தாலஞ்சா
மறப்பெருஞ் செய்கைமாறு வஞ்சக ரிட்டநீல
நிறப்பெருங் கடலும்யார்க்கு நீந்துதற்கரிய வேழு
பிறப்பெனுங் கடலுநீத்த பிரானடி வணக்கம் செய்வாம்"

சமணம், புத்தம் முதலிய புறச்சமயங்களை வேரறுத்துச் சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்த சைவசமய ஆசாரியர்கள் நால்வரையும் அவர்களுடைய அரும்பெரும் அற்புதச் செயல்களையும் தமிழ் மக்கள் யாவரும் நன்கறிவர். திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசு நாயனார் அந்நால்வரில் ஒருவராவர். இவர் தாசமார்க்கத்தில் ஒழுகிச் சிவபிரான் திருவடி நீழலை அடைந்தவர். இவர் செய்த அற்புதங்கள் உலகப் பிரசித்தமானவை. இவருக்கு அப்பர் எனும் பெயர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் இடப்பட்டது. இவர் பாடிய தேவாரங்களை 4-ம் 5-ம் 6-ந் திருமுறைகளாக நம்பியாண்டார்நம்பி வகுத்திருக்கிறார். இத்திருமுறைகள் ஓதுவார், கேட்பார், உரைப்பார் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுந் தெய்வத் தன்மை நிறைந்தன: பசுத்துவங் கெடுத்துப் பதித்துவம் அளிக்கவல்லன; வேதங்களின் சாரமாயுள்ளன; தமிழ் வேதங்கள் எனப் போற்றப்படுவன; வேண்டியார்க்கு வேண்டிய அளிக்கவல்லன; இவரது தேவாரங்களின் சொல்வளம் நோக்கிச் சிவபிரான் இவருக்குத் 'திருநாவுக்கரசு' எனக் காரணப் பெயரிட்டார். 'சொற்கோ' 'வாக்கின் மன்னர்' முதலிய இவரது பிறபெயர்களும் இவர்தம் சொல்லாட்சித் திறனை நன்கு விளக்கும்.

சிவபிரானருளால் தெய்வப்புலமை கைவரப் பெற்ற பின்னரே இவர் தேவாரங்களைப் பாடினர். இத்தேவாரங்களில் யாக்கையின் நிலையாமையையும், அதன் அமைப்பு முறையையும், அதனைப் பயன்படுத்தும் முறையையும் பிறவற்றையும் இடையிடையே எடுத்துக் கூறி யிருக்கின்றார். அவை யெல்லாவற்றிலும் சிறந்தன சிலவற்றை யீண்டெடுத்துக் காட்டுதும்.

"கால்கொடுத் திருகை யேற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீராற் சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்வுடைத் தாவ மைத்தங் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காட னாரே"

"கால்கொடுத் தெலும்பு மூட்டிக் கதிர்நரம் பாக்கை யார்த்துத்
தோலுடுத் துதிர மட்டித் தொகுமயிர் மேய்ந்த கூரை
ஓலெடுத் துழைஞர் கூடி யொளிப்பதற் கஞ்சுகின்றேன்"

"ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து
வொள்ளெலும் புதூண வரோம மேய்ந்து
தாமெடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம் பல படைத்தார்"

எனும் இத் தேவாரங்களில் யாக்கையை ஓர் வீட்டின் அமைப்பு முறைக்கு ஒப்பிடுகின்றார். ஒரு வீட்டைக் கட்டுவதற்குத் தூண், வளை, சுவர், கூரை முதலியன வேண்டுமல்லவா? அஃதேபோல் யாக்கையாகிய வீட்டைக் கட்ட கால்களும், கைகளும், இறைச்சியும், தோலும், எலும்பும், நரம்பும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. வீட்டிற்குப் பல கணியும் வாசலும் வைப்பதுபோல் உடம்பிலும் இரண்டு வாசல்களும் ஏழு பலகணிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

யாக்கையை ஒரு குளமாகவும் வர்ணித்திருக்கின்றார். குளத்தின் ஆழம் ஒரு முழம்; நீளம் ஒரு முழம்; அகலம் அரை முழம்; அக்குளத்தில் ஒன்பது துறைகளுண்டு; அதில் ஐந்து முதலைகள் வாழ்கின்றன.

"ஒருமுழ முள்ளகுட்ட மொன்பது துறையுடைத்தாய்
அரைமுழ மதனகல மதனில்வாழ் முதலையைந்து
பெருமுழை வாய்தல்பற்றிக் கிடந்துநான் பிதற்றுகின்றேன்
கருமுகி றவழுமாடக் கச்சியே கம்பனீரே"

இதில் ஒன்பது துறைகளென்றது ஒன்பது வாசல்களை யும், முதலைகள் ஐந்தென்றது ஐம்புலன்களையுமென்க.

யாக்கை: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களாலும் ஆக்கப்பெற்றதென்பதை "அஞ்சிணை வியற்றப் பட்ட ஆக்கை" என்றதால் பெற வைத்தார்.

'புழுப்பெய்த பண்டிதன்னை' என யாக்கையைப் புழு நிறைந்த பண்டியாகக் கூறினர். 'ஓம்பினேன் கூட்டைவாளா' என்பதில் யாக்கையை ஓர் கூடாகக் கூறினர். யாக்கை ஓர் ஒன்பது வாசலுடைய மாடம் என்பது போதர 'ஒழுகு மாடத்து ளொன்பது வாய்தலும்' என்றார். 'ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்க அடைக்கும்போ துணரமாட்டேன்' என்றதுங் காண்க. உயிர் உடம்பை விட்டுப் பிரியும்போது ஒன்பது வாசல்களும் அடைபட்டுவிடும். இன்னும் தொண்டை *சிலேட்டுமத்தால் அடைபட உயிர் உடம்பை விட்டு நீங்குமென்பதை "ஐயினால் மிடறடைப் புண்டு ஆக்கைவிட் டாவியார் போவதுமே" என்பதனால் குறிப்பிட்டார். திருஞான சம்பந்தரும் "புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி" என்றார்.

"ஐயினால் மிடறடைப்புண் டாக்கைவிட்டு
ஆவியார் போவதுமே அகத்தார்கூடி
மையினால் கண்ணெழுதி மாலைசூட்டி
மயானத்தி லிடுவதன்முன்"

என்பதனால் உயிர் நீங்கிய உடம்பைச் சுடும் முறையைக் கூறி யுளர்.

*சேடம் இழுக்கின்றதென நம்மவர் கூறுவதிதைத்தானென்பர்.

இனி உடம்பை வருத்தும் நோய்களின் தொகை தொண்ணூற்றெட்டு என்பதும் அவற்றினின்றுந் தப்பச் சிவபிரானை வணங்க வேண்டுமென்பதும் போதர,

"நாளு நம்முடை நாள்களறிகிலோம்
ஆளுநோய்களோ ரைம்பதோடாறெட்டும்
ஏழைமைபட் டிருந்துநீர்நையாதே
கோளிலி யரன் பாதமே கூறுமே"

என்றார். "பிணியுடை யாக்கை தன்னை" என்ற தொடரையும் நோக்குக.

"பழியுடை யாக்கை தன்னில் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழ மாட்டேன் மாயமுந் தெளிய கில்லேன்
அழிவுடைத் தாய வாழ்க்கை ஐவரால் அலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன் கடவூர்வீ ரட்ட னீரே"

"நடுவிலாக் காலன் வந்து நணுகும்போ தறிய வொண்ணா
அடுவன அஞ்சு பூதம் அவைதமக் காற்ற லாகேன்
படுவன பலவுங் குற்றம் பாங்கிலா மனிதர் வாழ்க்கை
கெடுவதிப் பிறவி சீசீ கிளரொளிச் சடையி னீரே"

"புழுப்பெய்த பண்டிதன்னைப் புறமொரு தோலான்மூடி
ஒழுக்கறா ஒன்பதுவாய் ஒற்றுமை ஒன்றுமில்லை
சழக்குடை இதனுள்ஐவர் சங்கடம் பலவுஞ்செய்ய
அழிப்பனாய் வாழமாட்டேன் ஆரூர்மூ லட்டனீரே"

இத் தேவாரங்களில் யாக்கையினிழிவையும் ஐம்புலன்களின் கொடுமையையும் விளக்கி அவ்வியாக்கையுடனிருந்து வாழ முடியாதென்கிறார். ஐம்புலன்களை அஞ்சு பூதங்கள் என்றார்.

"புள்ளுவ ரைவர் கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர் தூநெறி விளையவொட்டார்
முள்ளுடையவர் கடம்பை முக்கணன் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங் குணர்வினா லெய்யலாமே"

என்ற தேவாரத்தில் அவற்றைக் கள்வராகக் கூறினர்.

இதில் அவைகள் செய்யுந் தொழிலேயும் விரித்து விளக்கியுளார். அவற்றை ஓர் தேவாரத்தில் மூர்க்கர் எனவும், மற்றொன்றில் கூற்றம் எனவும் அழைத்திருக்கிறார். நிற்க.

"பொறியிலா அழுக்கை ஓம்பி"

"பொக்கமாய் நின்ற பொல்லாப் புழுமிடைமுடைகொள் யாக்கை"

"பிணம்புல்கு பீறற் குரம்பை"

"அலேயார் வினைத்திறஞ் சேராக்கை"

"அஞ்சப் புலனிவற்றா லாட்ட வாட்டுண்டு
அருநோய்க் கிடமாய வுடல்"

"உடலெனும் இடிஞ்சில்"

"பொசியினல் மிடைந்த புழுப்பொதிந்த
போர்வைப்பொல்லாத புலாலுடம்பை"

இத்தொடர்களெல்லாம் யாக்கையி னிழிவை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குவன.

இனி யாக்கையின் நிலையாமையைக் குறிக்கும் தேவார அடிகள் சிலவற்றை ஈண்டெடுத்துக் காட்டுதும்.

"படுகுழிப் பவ்வத் தன்ன பண்டியைப் பெய்த வாற்றால்
கெடுவதிம் மனிதர் வாழ்க்கை காண்டொறுங் கேதுகின்றேன்"

"பிணம்புல்கு பீறற் குரம்பை மெய்யாப்
பேதப்படுகின்ற பேதைமீர்கள்"

"தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டை"

"பொருந்தாத உடலகத்திற் புக்கஆவிபோமா றறிந் தறிந்தே"

நிற்க, சுவாமிகள் திருவங்கமாலையில் உடம்பிற்கும் அதன் உறுப்புகளுக்கும் ஒவ்வோர் சிறந்த தொழிலேக் கூறுகிறார்.

சிவபிரானைத் தலே வணங்க வேண்டும். கண்கள் அவரைக் காணவேண்டும். செவிகள் அவரைப்பற்றிக் கேட்க வேண்டும். மூக்கு அவரை முரல வேண்டும். வாய் அவரை வாழ்த்த வேண்டும். நெஞ்சு அவரை நினைக்கவேண்டும்.

கைகள் மலர் தூவிக் கூப்பித் தொழ வேண்டும். கால்கள் அவர் திருக்கோயிலை வலம் வரவேண்டும்.

"ஆக்கையாற் பயனென்—அரன் கோயில் வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ்வாக்கையாற்பயனென்"

இன்னும் சுவாமிகள் உடம்பினைத் *திருக்கோயிலாக வும், சிவபெருமானைக் காணுதற் கிருத்தற்கேற்ற †வீடாக வும் கூறியிருக்கின்றார்.

"குனித்தபுருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே"

என்ற தேவாரத்தில் உடம்பெடுத்தலும் நன்று என்கிறார். இன்னும் ஞானம் பெற்று உய்வதற்கு உடம்பு ஓர் சாதனம் என்பது வெளிப்பட,

"மெய்யுளே விளக்கையேற்றி வேண்டளவுயரத்தூண்டி
உய்வதோர் உபாயம்பற்றி உகக்கின்றேன்"

என்றார்.

உடம்புளே கடவுள் இருக்கின்றார். அவர் ஆண்டு ஒளி யாய் இருப்பார். அவர் கழல் ஏத்தி இருக்கில் உடம்பெடுத்து வாழ்வதாற் குறையில்லை என்னும் இன்னோரன்ன கருத்துக் கள் அமைந்து விளங்கும் தேவாரங்கள் பலவுள. விரிப்பிற் பெருகும். நிற்க.

---

*"காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"

†"உடம்பெனு மனையகத்து வுள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே"

செந்தமிழ்ச் செல்வர்களே! இதுவரையும் ஈண்டெடுத்துக் காட்டிய அப்பர் கூற்றுகளால் யாக்கையின் நிலையாமையையும், அதனைப் பெற்றோர் அதனைப் பயன்படுத்திக்கொள்ளும் வழியையும் பிறவற்றையும் நன்கறிந்து கொள்ளலாம். நிலையில்லா யாக்கையைப் பெற்ற நீங்கள் நிலையான ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனை நீங்கள் விரும்புவதியற்கையே. விரும்பினாலும் அஃதியாவர்க்கும் கிடைப்பதொன்றன்று. அதனைப் பெறப் பன்னாள் முயலவேண்டும். முயலுமாற்றை அப்பர் முதலிய நம் சமயகுரவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

அன்பர்களே! அவர்கள் அருண்மொழிகளைப் பொன் போற் போற்றுமின்! இன்றே அவற்றின்படி ஒழுகுமின்! ஒழுகி என்றுமழிவில்லா இன்பத்தை யெய்துமின்!

"பொருத்திய குரம்பைதன்னைப் பொருளெனக் கருதவேண்டா
இருத்திஎப் பொழுதும்நெஞ்சுள் இறைவனை ஏத்துமின்கள்"

"மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ்நாகை மன்னுகாரோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே"

"தந்தையார் தாயாருடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந் தாமாரே, வந்தவா றெங்ஙனே போமாறேதோ மாயமாம் இதற்கேதும் மகிழவேண்டாம், சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின் திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ்சென்னி, எந்தையார் திருநாமம் நமச்சிவாய என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே."

—"இந்துசாதனம்"

ஹிராஸ் பாதிரியார் சொற்பொழிவுகள்

[மயிலைக்கிழார் இளமுருகனார்]

சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் அக்கழக உதவித் தலைவர் திவான்பகதூர் அரங்கநாதர் தலைமையில் 19,20-10-37 ஆகிய இரண்டு நாட்களில் பம்பாய் அர்ச். சவேரியார் கல்லூரியிலுள்ள இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையத் தலைவராகிய திரு. ஹிராஸ் பாதிரியார் (The Rev. Father Heras, Director of the Indian Historical Research Institute, St. Xavier's College, Bombay) மோஹஞ்சோ டாரோவிற் கிடைத்த கல்லெழுத்துக்களைப்பற்றியும் அவற்றால் துலங்கும் நாகரிகத்தின் பழமையைப்பற்றியும் இரண்டு அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அச்சொற்பொழிவுகளிற் கூறப்பெற்ற செம்பொருள்கள் பலவற்றுட் சில கீழ்வருவனவாகும்.

மோஹஞ்சோடாரோ என்ற இடம் சிந்து (Sind) மாகாணத்திலுள்ள லார்கானு ஜில்லாவில் (Larkhana District) சிந்து (Indus) நதிக்கரையிலுள்ளது. இங்கு அரசாங்கத்தார் நிலத்தை அகழ்ந்து பார்த்ததில் மிகமிகப் பழைய நகரம் ஒன்று காணப்பட்டது. அந்நகரத்தில் சிறந்த பல கட்டிடங்களும் நீர்நிலைகளும் பிறவும் இருந்த அடையாளங்கள் பல கிடைத்துள்ளன. சிவலிங்கங்களும் அம்மை வழிபாட்டுக்குரிய உருவங்களும் நூற்றுக்கணக்கான ரிஷப முத்திரைக் கற்களும் தூபகலயம் முதலியனவும் பொன் வெள்ளி நகைகளும் பிறவும் கிடைத்தன. கல்லாலும், மண்ணாலும் சங்காலும் செம்பாலும் ஆக்கப்பெற்ற கலங்களும் கருவிகளும் பிறவுமே காணப்படுகின்றனவே தவிர இரும்பினு லாக்கப்பட்டது எதுவும் காணப்படவில்லை. இதிலிருந்தும் வேறு பற்பல ஆதாரங்களைக் கொண்டும் இந்நகரம் இரும்பு நாகரிகத்துக்கு முந்திய கற்செம்பு நாகரிக காலத்தைச் (Chalcolithic age) சேர்ந்ததென்று அரசாங்க நிபுணர்களான ஸர் ஜான் மார்ஷல் (Sir John Marshall) முதலியோர் கூறுகின்றனர். இது குறைந்தது ஐயாயிரம்

ஆண்டுகட்கு முந்திய காலம், அதாவது கி. மு. (3000 B-C.) என்று கூறப்படுகிறது. இது ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகள் முற்பட்ட மிகப் பழைய காலமாகும். எனவே இந்த நாகரிகம் ஆரியக் கலப்பு ஒரு சிறிது மில்லாத பழைய இந்திய நாகரிகமாகும். இது சைவ நாகரிக மென்பது ஆங்குக் கிடைத்த சிவலிங்கங்கள் முதலிய பல சான்றுகளால் விளங்கும்.

மேலே கூறப்பட்ட முத்திரைகளிற் காணப்படும் எழுத்துக்கள் சித்திரச் சொல்லெழுத்துக்களாகும் (pictographs) அவைகளின் கோவையாகிய வாக்கியங்கள் வலத்திலிருந்து இடமாக எழுதப்பட்டுள்ளன. இவைகளின் ஒலியும் பொருளும் விளங்கவில்லை யென்று மார்ஷல் முதலியோர் கூறினர். ஆனால் ஹிராஸ் பாதிரியார் இவை மிகப்பழைய தமிழ்ச் சொற்கள் அல்லது திராவிடச் சொற்கள் என்று கண்டு பிடித்துள்ளார். ஏறக்குறைய இரண்டாயிரம் முத்திரைக் கற்கள் (Seals) இதுவரையில் கிடைத்துள்ளன. இவற்றுள் ஐந்து முத்திரைகளைத் தவிர ஏனையவற்றின் பொருள் தமக்குத் தெளிவாகத் தெரிகிறதென்று இப்பாதிரியார் மெய்ப்பித்துக் காட்டுகிறுர். இம்முத்திரைகளில் இவ்வெழுத்துக் கோவைகளாற் கூறப்படும் பொருள்கள் பலவற்றை இப்பாதிரியார் கூறுகிறுர். கடவுள் ஆண் பெண் வடிவினர், ஆக்கல் அளித்தல் அழித்தல் செய்பவர், எட்டுருவுடையவர், ஞாயிருக விளங்குபவர் முதலியனவும் பிறவும் கூறப்படுகின்றன. அக்காலத்திய மக்கள் மேஷ ரிஷப முதலிய எட்டு ராசிகளையே கொண்டனர் (பன்னிரண்டில்லை) விஷு (Equinox) அப்போது தனுவிலிருந்தது. வானநூற்கணக்கின்படி அக்காலம் கி. மு. 5100 (அதாவது இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகட்கு முந்தியது) ஆகும் இப் பெரும் பழமையை நிலைநாட்டவேறு பலவகையான ஆதாரங்களும் உள்ளன.

ஹிராஸ்பாதிரியார் தமது ஆராய்ச்சியிற்கண்ட உண்மைகளை அவ்வப்போது பத்திரிகைகளிற் கட்டுரைகள் வாயிலாக வெளியிட்டுவருகிறுர். எல்லாவற்றையும் திரட்டி ஒருதனி

நூலாக வெளியிடும் தொண்டினையும் மேற்கொண்டுள்ளார். இவருடைய ஆராய்ச்சி மிகவும் வியக்கத்தக்கதாக இருக்கிறது. இவருடைய விரிவான ஆராய்ச்சி நூலைத் தமிழரும் சைவரும் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களென்பதில் ஐயமில்லை.

இவ்விஷயத்தைப்பற்றி நாமும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் எழுதலாமென்று கருதுகிறோம். தமிழ்த் தாயும் சிவச்சேயும் துணைசெய்க.

திருக்கயிலாய யாத்திரை*

[உயர்திரு. சுவாமி விபுலாநந்தர் அவர்கள்]

சிவநேசச் செல்வர்களே!

திருக்கயிலையைத் தெரிசித்து வந்த பெரியார் ஒருவரைக் கண்டேன். அவர் என்னைப் போகும்படி தூண்டினர். யானும் இன்னும் சிலரும் போய் வந்தோம். கயிலை சென்று வந்தோர் மௌனம் சாதிக்க வேண்டுமென்றாலும் சென்னை வந்த பின் உங்கள் முன் பேசும்படியாயிற்று.

முதற்கண் கயிலை செல்லும் நெறியைக் குறித்து ஒரு சில பகர்வேன். கயிலையங்கிரி உள்ள நாடானது திபெத்து நாடு. அந்நாட்டை. 'உலகின் கூரை' (Roof of the world) என்று கூறுவார்கள். கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 15,000 அடி உயரத்தில் இருக்கிறது. இந்தியாவிலிருந்து அங்கு செல்ல 'லிப்லேக்பாஸ்' என்ற கணவாய் வழியாகப் போக வேண்டும். அவ்விடம் சுமார் 16,000 அடி உயரம். வருஷத்தில் எட்டு மாதங்கள் பனியால் மூடப்பட்டிருக்கும். நான்கு மாதங்களில் வியாபாரம் முதலிய போக்குவரவு உண்டு. அக்காலத்தேயே யாத்திரை செய்தல் கூடும். அல

*உயர்திரு. சுவாமிகள், 8-9-37-ல் சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் நிகழ்த்திய சொற்பொழிவு—திரு. G. கலியாணம் B. A. தம் கைக்குறிப்புகளைக் கொண்டு எழுதியது.

மோரா, மாயாவதி என்ற இரண்டிடங்களில் இராம கிருஷ்ணமடங்கள் இருக்கின்றன. அல்மோராவுக்கு கார்க் கோடமும், மாயாவதிக்கு காரக்பூரும் அண்மிய இருப் புப் பாதை நிலையங்கள். அல்மோராவிலிருந்து கயிலைக் குச் செல்வதே இலேசானவழி. கார்க்கோடத்திலிருந்து அல்மோராவுக்கு மோட்டார் பஸ்ஸில் போக வேண் டும். அல்மோராவிலிருந்து கயிலாயம் 220 மைல் தூரம். போய்த் திரும்பிவர 45 நாட்கள் செல்லும். சுமார் 175 ரூபாய் செலவாகும் அல்மோராவிலிருந்து அஸ் காட் என்னு மிடத்திற்கு குதிரை முதலியவைகளில் ஏறிச் செல்லவேண்டும். அஸ்காட்டிலிருந்து கார்ப்பியா என்னுமிடத்திற்கு ஐந்து நாட்கள் கடினமான பிரயாணம். மலை ஏற்றம் அதிகம்; கொடிய விலங்குகள் பயம் உண்டு; மனித சஞ்சார மில்லாத இடங்களில் திருடர்பயமும் உண்டு. மைசூர் மன்னர் கயிலை சென்று திரும்பியபின் வழியில் சில இடங்களில் சீர் திருத்தங்கள் செய்யப் பட்டிருக்கின்றன. "நிர்ப்பாணி" (தண்ணீர் இல்லாத இடம் என்று பொருள்) என்ற இடத்தில் கயிற்றுப் பாலத்தாலேயே மலையைத் தாண்டிச் செல்ல வேண்டுமாம். ஆனல் இப்பொழுது ஒடுக்க மான ஒருவழி செய்திருக்கின்றனர்.

திபெத் என்பதை 'பூத்' என்று அவர்கள் சொல்கிறுர் கள். அவர்களுக்கு 'பூட்டியஸ்' என்று பெயர். நேபாளத் திற்கும், இந்தியாவிற்கும் எல்லையாக, இயற்கை அரணுக இருப்பது காளிநதி. பெயருக்கேற்ப அந்நதி நுரை திரை களுடன் பயங்கரமான தோற்றத்துடன் காணப்படும். காளி நதி வழியாக கயிலை போகலாம். காளி வழிகாட்ட பின்னர் பூதர்கள் (பூட்டியாஸ்) வழி காட்டுவார்கள். கயிலை காண வேண்டுமென்ருல் ஒரு பத்து இலட்சம் படிகளேறிக் கால் களைக்க வேண்டும். ஒருமணி நேரத்தில் ஒருமைல் தூரமே பிரயாணம் செய்யலாம். அதுவும் காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரையில் போகக்கூடும், அதற்குமேல் கூடா ரம் அடித்துத் தங்கிவிட வெண்டும். கடுங்குளிர்; ஏழெட்டு

உடைகள் வேண்டும். உணவு கஷ்டங்கள் அதிகம், அரிசி வேகாது. யாங்கள் வேகாத அரிசியை உண்டோம். எங்களுடன் வந்த ஒருசாது உருளைக்கிழங்கைச் சுட்டு சாப்பிட்டார். யான் கமண்டலத்தில் நீர் வைத்திருந்தேன். இரவில் பனிக்கட்டியாக உறைந்து விட்டது.

கயிலை யாத்திரையில் மூன்று முக்கியமானவை குறிக்க வேண்டுவன. அவை (1) கயிலை மலையின் காட்சி, (2) மானசவாவியின் மாட்சி, (3) திபெத்தினர் அன்பு. கயிலைத்தோற்றத்தைப்பற்றிச்சிறிது கூறுகிறேன். சந்திரன் ஒளியைப்போன்றிருந்தது. இருண்ட நள்ளிரவிலும் பார்த்தேன்; தண்ணொளியுடன் விளங்கிற்று. பகலில் உருக்கிய வெள்ளியைப் போலும் காணப்பட்டது. முத்துமாலைகளை வரிசை வரிசையாகத்தொங்க விட்டதுபோலும் இருந்ததாகவும் கூறலாம். நான் பருப்பொருள்களாகச் சொன்னேன். சேக்கிழார் சுவாமிகள் புறத்தன்மையோடு அகத்தன்மையையும் பெரிய புராணம் திருமலைச்சிறப்பில் முதன் மூன்று பாட்டுகளில் கூறியிருக்கின்றனர். 'பொற்கோட்டு இமயம்' என்பது சந்தேகமாக இருந்தது. இமயத்தில் நந்தாதேவி, பஞ்சசூலி முதலிய சில குடுமிகள் அதிகாலையில் பொன்னேபோல் பிரகாசித்தன. "பனிமால் வரைப்பாலது; புண்ணியந்திரண்டுள்ளது போல்வது" என்பர் சேக்கிழார் பெருமான். கயிலாயம் உள்ள நாடான திபெத் 15 ஆயிரம் அடி உயரத்திலிருக்கிறது. இந்நாட்டினும் வேறுபட்ட தன்மைகள் சில அங்குள. கடுங்குளிர்; வாயுவின் அமுக்கம் குறைவும்; நீரானது உறைந்து பனிக்கட்டியாக தீயைத்தொடமுடியாத தன்மையிலிருக்கிறது.

"நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளி ராக எழுந்ததோர்
உலக மென்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை"

என்பது சேக்கிழாரடிகள் திருவாக்கு. தென்னாட்டிலிருந்து போகிறவர்களுக்குக் கயிலை வெகு அருமையாகத் தோன்றும். அவர்கள் பலதலங்களைக் கண்டிருப்பது ஒருகாரணம். தூரத்திலிருந்து போவது மற்றொன்று. கயிலைக்குன்றம் பலகோடி

கோயில்கள் அமைந்ததுபோல் தோன்றுகிறது. மதில்கள் போல் நான்குபுறமும் அமைந்திருக்கின்றன. சித்திரக்கட்டிட அமைப்புப்போலவும், கோபுரங்கள் போன்றும் தோன்றுகின்றன. 22 ஆயிரம் அடி உயரத்தில் சிகரம் இருக்கிறது. கோயில்கள் அமைப்பை இதைப்பார்த்தே செய்தார்களோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. மலைச்சிகரத்திற்கு ஏறிப் போக முடியாது. எவரெஸ்ட்டை யடைந்தாலும் அடையலாம்; இதையடைதல் முடியாது. கயிலேயங்கிரியைச் சுற்றி வர 28 மைல் தூரம். 7 மைலுக்கு ஒரு வீதி அளந்துவைத்தாற்போலிருக்கிறது. நான்கு மூலைகளும் சரியாக இருக்கின்றன. இடமொன்றும், வலமொன்றுமாக இரண்டு ஆறுகள் ஓடி ஒன்று சேர்ந்து போகின்றன. அவை மூன்று அல்லது நாலு அடி ஆழமிருக்கும் இடப்பாகத்தில் கௌரிகுண்டம் என்ற வாவி அம்பிகை சிவபெருமான் வாமபாகத்திலிருக்கும் தன்மையை நிகர்த்திருக்கின்றது. வடக்கே தான் சமீபத்தில் செல்லலாம். கயிலை மலையைச்சுற்றி நாலு கும்பாக்கள் (குகைகள்) இருக்கின்றன. மாந்தாதா இராவணன் முதலியோர் தவஞ் செய்ததாகச் சொல்லப்படும் இடங்கள் இருக்கின்றன.

மானசவாவி கயிலேயிலிருந்து 25 அல்லது 30 மைல் தூலவிலுள்ளது. அதன் தோற்றம் என்றென்றும் என் கண்முன் நிற்கின்றது; என் உள்ளத்தில் பதிந்து கிடக்கின்றது. நீலங் கலந்த பச்சை நிறமாக உமாதேவியாரின் உருவத் தோற்றமேயோ என்னும்படி ஒளிர்கின்றது. அலைகள் உண்டு. நல்ல நீர் உண்டு. கௌரி குண்டத்தில் பனிக் கட்டிகளை உடைத்து விட்டுப் பின்னர் முழுக வேண்டும். இதில் அப்படியில்லை. வெந்நீர் ஊற்றுகள் இருப்பதால் பனிக்கட்டியாக இல்லை. நன்றாக முழுகலாம். பொறுக்க முடியாத குளிர் இல்லை. கருநிறமான அன்னப் பறவைகள் வசிக்கின்றன; தலை பெருத்த மீன்கள் சஞ்சரிக்கின்றன. இறந்துபோய் அலைகளால் கரைகளில் வாரி யிறைக்கப்படும் மீன்களை எடுத்துப் போய், காய வைத்து, தூள்செய்து நெருப்பில் போட்டு தூபம் பிடிக்கின்றனர். அப்படிப் பிடித்தால் பேய் பிசாசம் அணுகாதாம். மானச மடுவைச் சுற்றி எட்டு கும்பாக்கள் (குகைகள்) இருக்கின்றன.

திபெத்தினர் கயிலையை மிக்க பக்தியுடன் போற்றி வருகின்றனர். வெகு தூரத்தில் கண்ட மாத்திரத்திலேயே "கைலாஸ் மகாராஜ்க்கு ஜே" என்று ஆரவாரம் செய்கின்றனர். அவர்கள் மலை வலம் வரும் தன்மை பெரிதும் போற்றத் தக்கது. முழுஉடலும் பூமியில் தோய வணங்குவார்கள். தலைபடும் இடத்தில் ஒரு கோடு கிழித்துக் கொள்வார்கள். கோடு கிழித்த இடத்தில் கால்களை வைத்து மறுபடியும் வணங்குவார்கள். இவ்வாறே மலையைச் சுற்றி 28 மைலையும் வருவார்கள். அப்படி வர 22 நாள் ஆகிறதாம். அவ்விதம் சொல்லுங்கால் பொழுது எங்கே போய் இருள் சூழ்கின்றதோ அவ்விடத்தே இருந்துவிடுவார்கள். அந்நெறிக்கண் போவோர் யாரேனும் உணவு கொடுத்தால் உண்பார்கள். 'கைலாச மானசர்வா' என்று கயிலையையும் மானச வாவியையும் சேர்த்தே கூறுகிறார்கள். அப்பனையும் அம்மையையும் பிரித்தல் இயலுமோ?

திபெத் நாட்டிற்கு அரசர் குருக்கள்மார்களே. அவர்களுக்கு லாமா என்று பெயர். அவர்கள் பௌத்த மகாயானப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சமயம் சைவமும் அல்ல. பௌத்தமும் அல்ல. இரண்டுக்கும் இடையே உள்ள ஒரு சமயம். பெரிதும் வழிபாட்டுச் சமயம் என்றே கூறலாம். விநாயகர் நடராஜர் முதலிய விக்கிரகங்கள் இருக்கின்றன. அவர்களில் சிலர் கடுங்குளிரில் கொடுந்தவம் புரிகின்றனர். குகைகளின் வாயை அடைத்து உணவு கொடுக்க ஒரு துவாரம் மாத்திரம் வைத்துக் கொண்டு சூரிய வொளியைக் காணாது ஜீவித்திருக்கின்றனர். மடாதிபதிகள் இருக்கின்றனர். சுவடி நிலையங்களும் உண்டு. தக்லாக்கோட் என்ற இடத்தில் ஒரு பெரிய மடத்தில் 150 சந்நியாசிகள் இருக்கின்றனர். மரங்கள் கிடையாது. கோதுமை, பார்லி, சிறுபூண்டுகள் இவைகளே வளர்கின்றன. சாமரைப்பசுக்களின் பால், தயிர், நெய் முதலியவைகளை உபயோகிக்கின்றனர். சாமரை ஏறுகளில் (Yak) ஏறிச்செல்கின்றனர். ஆடுகள் உண்டு. சூரியனை மேகம் மறைத்த உடனே வெப்பம் மாறிவிடுகின்றது. மேகந்தான் நிழல். திபெத் மிகப்பழைய நிலம். இமயம் ஒருகாலத்தில்

கடலின் கீழிருந்தது. 'ஆதிமாமலை' என்று அப்பர் சுவாமிகள் சொல்வது பொருந்தும். நான்கு பக்கங்களில் நான்கு நதிகள் ஓடுகின்றன. அவை சிந்து, பிர்ம புத்ரா, சட்லெஜ், கர்ணலி என்பன. பிர்மபுத்திரா மானச வாவியில் உற்பத்தியாகிறது என்பார்கள். அன்பர்களே! யான் கயிலையாத்திரையில் கண்ட சிலவற்றை உங்கள் முன் ஒருவாறு கூறினேன். நீங்கள் எல்லோரும் சிவபெருமான் பேரருளுக்குப் பாத்திராவீர்களாக.

கயிலைமலையானே போற்றி! போற்றி!!

அண்ணாமலையில் அட்டூழியம்

[காரியதரிசி]

திருவண்ணாமலையில் நடைபெறும் தீப தரிசனத்தை லக்ஷக்கணக்கான சிவனடியார்கள் ஆண்டுதோறும் பெற்று மகிழ்கின்றனர். பஞ்சமூர்த்திகள் உருத்திராக்க மண்டபத்துக்கு எழுந்தருளுவதற்கு ஒரு மணிநேரம் முன்பாகவே அம்மண்டபத்துக்குத் தெற்கிலுள்ள ஒரு சிறு மேடையிற் பல நாற்காலிகளில் உத்தியோகஸ்தர்களும் ஐரோப்பிய ஆடவரும் பெண்டிரும் பாதிரிகளும் உட்கார்ந்துகொண்டு உல்லாசமாகச் சுருட்டு சிகரெட்டு பிடிப்பதும் "வேடிக்கை" பார்ப்பதுமாகப் பொழுது போக்குவர். கோயிலதிகாரிகளும் ஊர் காவலதிகாரிகளும் பெரிய உத்தியோகஸ்தர்களின் தயைக்குப் பாத்திரராக வேண்டி முகமன் கூறுவதிலும், "காக்கை பிடிப்பதிலும்" "லோட்டா பண்ணுவதிலும்" இவைபோன்ற இழிவான செயல்களிலும் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு முந்துகிறார்களே தவிர திருக்கோயில் எல்லைக்குள் இத்தகைய நிகழ்ச்சிகள் பெரும் பாதகங்களென்பதை அறவே மறக்கின்றனர். அடியார் குழாங்கள் இவற்றைக் கண்டு மனம் புழுங்குவதை ஆண்டுதோறும் கண்கூடாகக் காணலாம். அண்ணாமலைவாசிகள் முனைந்து இவ்வட்டூழியத்தை இவ்வாண்டு முதலாக வாவது ஒழிப்பார்களாக.

சம்பந்தர் தேவாரமும் சர்வகலாசாலை உரையும்

[ஈ. நா. தணிகாசல முதலியார், பி.ஏ.,பி.எல்.]

சென்னை சர்வகலாசாலை 1939-ஆம் வருடத்திய பி. ஏ. பரீட்சைக்குப் பாடமாக அச்சிட்டுள்ள தமிழ்ப்பாக்களில் நான்காம் பிரிவு திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகங்களில் ஒன்று. அது திருக்கழுமலப் பதிகங்களில் ஒன்றாய்ச் "சேவுயருந்திண் கொடியோன்" என்னும் செய்யுள் முதலாகப் பதினொரு செய்யுட்கள் பெற்றது. பி. ஏ. பரீட்சைக்குச் செல்லும் மாணவர் புகலிவேந்தர் பதிகம் ஒன்றாகிலும் அறிய வேண்டுமென நமது சர்வகலாசாலை எண்ணியது மிகவும் புகழத்தக்கதேயாம். ஆயினும் அதற்கு எழுதியுள்ள குறிப்புரை மிகவும் மோசமானதென்றே பகரல் வேண்டும். இது மாணவர்களுக்குப் பின்வரும் விவரங்களிற் பிழைகளை யூட்டுவதால், அவ்வுரை எழுதாமல் விடப்பட்டிருப்பின் சர்வகலாசாலை தனது கடமையைச் சிறிது நன்றாய்ச் செய்ததென்றே போற்றப்படும். இக்குறிப்புரையிலுள்ள பிழைகளை விவரிப்போமாக:—

ஷை குறிப்புரையில் முன்னுரையின் பிற்பகுதியில் பின்வருவன காணலாம். "ஞானசம்பந்தர் பாடியருளிய பதிகங்கள் 384, பதிகம் பெரும்பாலும் பத்துப் பாட்டுக்களையுடையது. இப்பதிகங்கள் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. இவர் திகழ்ந்த காலத்தை கி. பி. 7-வது நூற்றாண்டென்று கூறுகின்றார்கள்."

ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகங்களில் வன்மீகத்திற்குத் தப்பி வெளிவந்துள்ளன 624*. அவற்றுள் முதல் திருமுறையில் 217 பதிகங்களும், இரண்டாந் திருமுறையில் 205 பதிகங்களும், மூன்றாந் திருமுறையில் 202 பதிகங்களு

*இதற்கு ஆதாரம் இன்னதென்பது விளங்கவில்லை—பத்திரிகாசிரியர்.

முள. திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்றில் உள்ள செய்யுட்கள் பதினொன்றாகும். "திருப்பிரமபுரம் - மொழிமாற்று" போன்ற சில பதிகங்களில் பன்னிரண்டு செய்யுட்கள் காணலாம். சம்பந்தர் பதிகங்களில் பத்தே பாடல்களால் பாடியது ஒன்றேனுமில்லை. இவ்வாறாக, ஆளுடையபிள்ளையார் "பதிகம் "பதிகம் பத்துப் பாட்டுக்களுடையது" என்பது விபரீதக் கூற்றன்றோ? இவ்வுரை யெழுதிய புலவர் தேவாரத் திருமுறைகளை ஒரு முறையாகிலும் நோக்கியவராகக் காணப்படவில்லையே! இவ்வாறு நமது கலாசாலை கண்மூடித் தனமாய் இத்தகைய உரைகளை வெளியிடல் யாவரும் வருந்தத் தக்கதே.

சம்பந்தர் "திகழ்ந்த காலத்தை கி. பி. 7-வது நூற்றாண்டு என்று கூறுகின்றார்கள்" என எழுவா யின்றிக் கூறின், மாணவர் அவ்வாறு கூறுவோர் யாவர் என்பதும், எவ்வாதரவுகளா லென்பதும் உணரலாகுமோ?

இனி செய்யுட்களின் குறிப்புரைகளை நோக்குவோம். 3-ம் செய்புள் ("அலங்கல் மலிவானவரும்" என்னும் செய்யுள்) "மீன் சனிபுக்கூன் சலிக்குங்காலம்" என்பதற்கு பின் வருமாறு சர்வகலாசாலைக் குறிப்புரை எழுதியிருக்கக் காண்கின்றோம் "மீன் சனி - சனியாகிய மீன் - புக்கு (பகையிடத்தில்) புகுந்து ஊன்சலிக்கும் - உடல்கள் நடுங்கும்" என்பன காண்க. "மீன் சனி" என்பதற்குச் சனியாகிய நட்சத்திரம் எனப் பொருள் கூறின் அச்சொற்றொடர் வெற்றெனத் தொடுத்தும் "புக்கு" என்பதில் பொருள் மயங்க வைத்தும் பிள்ளையார் பாடியது போலாம். அனுவசியமான சொற்களைச் சீர்களை நிரப்பு நிமித்தம் சம்பந்தர் அடுக்குவதில்லை. சனி யென்பதற்கே சனி யென்னும் கோள் எனப் பொருள் வருமாதலால் "மீன்" என்னும் சொல்லுக்கு வேறு பொருளுண்டென்பது தீர்மானித்தலே, ஆளுடைய பிள்ளையார் செய்யுள் நடைக்குப் பொருத்தமாம். "மீன்" என்பது, ககன வட்டத்திற் சூரியன் பங்குனி மாதத்திற் புகும் 12-ம் ராசியாகிய மீன ராசி. இதன் அமைப்பை வருடாதி நூலில்

"பூராடம், உத்திராடம் பூங்கால் நாயாம் ;
சீரா மீனத் தோரரை நான்கே"

என்பதை நோக்குக.

சனி ஒவ்வொரு ராசியிலும் $2\frac{1}{2}$ வருடம் தங்குவான். சாந்த இராசியாகிய மீனராசியில் கடூரக்கோளான சனி தங்குமாயின், உலகத்தில் பஞ்சம் முதலிய கஷ்டங்கள் நேரலாகும். வருடந்தோறும் சூரியன் அக்கினி நட்சத்திரத்துடன் சம்பந்தப்படும் போது இளவேனிற்காலம் கடூரமாய்க் காணப்படுகின்றதன்றோ ? அவ்வாறே மற்றைய கோள்களும் சில ராசிகளில் புகுந்தபோது தீமை பயப்பது சாதாரணமெனச் சோதிடம் வல்லோர் மொழிகின்றனர். மழைபெய்யா தொழிந்த கூதிர்க்காலத்திற்குப் பின்வரும் பின்பனிக்கால விறுதியில், அக்காலத்திய மீனராசியில் சனி புகுமாயின்* பஞ்சம் பலமாய் வருமென்பது வெளிப்படை. இத்தகைய காலத்திலும் கழுமலங்களிலுள்ள மெய்யன்பர்களின் வண்மை, கலங்கலிலா மனத்துடனமையு மென்பது இச் செய்யுள் கருத்து.

மற்றும் 4-ம் செய்யுள் "பாரிதனை.—" என்பதில், பாரிதனை என்பதற்கு "பூவுலகாகிய இதனை" எனப் பொருள் கூறப்பட்டது. நிஷ்காரணமாக இதில் சுட்டு வருவானேன் ? அவ்வாறு சம்பந்தர் பாடுவாரா என்பதை இவ்வுரையாசிரியர் கவனிக்கவில்லை. "இதன்" என்பது "இதம்" என்னும் சொல்லில் மகரம் னகரமாய்த் திரிந்ததென்று எளிதில் உணர்த்தியிருக்கலாம். எனவே "பாரிதினை" என்பதற்கு உலகத்திலுள்ள சுகத்தை என்று விளக்காமல், சீரைநிரப்பு நிமத்தம் சம்பந்தர் சுட்டைச் சேர்த்து மொழிந்ததுபோல் இவ்வுரை கூறுவது பொருந்தாது.

---

*"அலங்கல்மலி வானவருந் தானவரு மலைகடலைக் கடையப் பூதம், கலங்கவெழு கடுவிடமுண்டிருண்டமணிக் கண்டத்தோன் கருதுங்கோயில், விலங்கமலர் புயன்மறந்து. மீன்சனிபுக் கூன்சலிக்குங் காலம் தானும், கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய மெய்யர் வாழ் கழுமலமே" திருக்கழுமலம் - பண் - மேகராகக் குறிஞ்சி - 3.

இச்செய்யுளின் பிற்பாக விசேடத்தையும் இக்குறிப்புரை விளக்கவில்லை. மேகத்தில் காணப்படும் நகரத்தை கந்தருவ நகரமென்று அழைத்தல் மரபாதலால், அக்கந்தருவர் கழுமலநகர் மேல்மாடியில் மகப்பாராட்டும் இன்னிசையால் மகிழ்வர் என இயற்கை யழகுக்குப் பொருந்துமாறு ஒலிக்கின்ற மேகங்களிலுள்ள விசும்பியங்கும் கணமென்றார் காழி வேந்தர்.*

மற்றும் 6-ம் செய்யுளில் "கருஞ்சகடம்" என்பது யாதென விளக்கப்படவில்லை. அது கருப்பஞ்சாற்றைக் கரும்பினின்று பிழியும் ஆலை.

பின்னும் சம்பந்தர் பதிக அமைப்பு 8,9,10,11 ஆகிய இச்செய்யுட்களில் பெரும்பாலும் எல்லாப் பதிகங்களிலும் பொதுவென்பது இக்குறிப்புரை மாணவர்களுக்குக் காட்டியிருக்கலாம். சம்பந்தர் பதிகத்தில் 8-ம் செய்யுள் இராவணன் ஆணவம் அவன் கைலாய மெடுக்க முயன்றதால் சிதைந்ததும், 9-ம் செய்யுள் பிரமனும் மாலும் பரமசிவத்தின் முடியும் அடியும் முறையே தேடின பயனற்ற வேட்கையும், 10-ம் செய்யுளில் சாக்கியர், சமணர் மாயப் பொய்ம் மொழிகளை உலகம் கொள்ளற்கவென்பதும், 11-ம் செய்யுள் அதற்கு முன்னுள்ள 10 செய்யுட்களை ஓதுவதால் வரும் பயனும் உணர்த்தும். இவற்றையும் நமது சர்வகலாசாலை யுரை கருதாதொழிந்தது மாணவர் துர்ப்பாக்கியமே.

---

*பாரிதனை நலிந்தமரர் பயமெய்தச் சுபமெய்தும் பரிசு வெம்மைப் - போரிசையும் புரமூன்றும் பொன்றவொரு சிலைவளைத்தான் பொருந்துங் கோயில், வாரிசைமென் முலைமடவார் மாளிகையின் சூளிகைமேல் மகப்பாராட்டக், காரிசையும் விசும்பியங்கும் கணங் கேட்டு மகிழ்வெய்தும் கழுமலமே 4.

மாறும் உலகில் மதத்திற்கிடம்

[ச. சச்சிதாநந்தம் பிள்ளை]

நமது சென்னை மாகாணம் உலகிற்களித்த அரும் பெரும் புலவர்களுள் சர்-யஸ்-இராதாகிருஷ்ணன் என்பவர் ஒருவர். இவர் இந்தியாவில் மட்டுமன்றிப் பிற பல நாடுகளிலும் தலைசிறந்த தத்துவசாஸ்திரி என்று பாராட்டப்படுபவர். இவரது ஆங்கிலப் பேச்சுவன்மையும் எழுத்துவன்மையும் பெரிதும் வியக்கத்தக்கவை. இன்னும் பல சிறப்புடைய இப் பேரறிஞர், 30-10-'37ல் சென்னைப் பல்கலைக்கழகப் பரீக்ஷை மண்டபத்தில், பலமாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் தற்கால உலகில் சமயத்திற்குள்ள இடமெது என்பது பற்றி ஒரு அரிய விரிவுரை ஆங்கிலத்தில் அழகுற நிகழ்த்தினார். அதன் சாராம்ஸம் கீழே தரப்படுகிறது.

பலதுறைகளில் தற்கால உலகம் பண்டையுலகத்தினின்று வேறுபட்டுப் பிரியும் நிலையை எய்தியுள்ளது. பல்வேறு இனத்தவரும், நாகரிகங்களும், மதங்களும் தத்தம்மில் நிறைவுடைய தனிமுதல்கள் என்னும் கருத்து மாறிவருகின்றது. எல்லா நாட்டவரும், எல்லாத் துறைகளிலும் ஒருவரோடொருவர் கலந்து யோசித்து, உலகப் பொதுநன்மைக்கான முறையில் இனி நடந்து கொள்ளவேண்டுமென்று விரும்பத் தலைப்பட்டுள்ளனர். இது, இலௌகிகத் துறையில் மட்டுங் காண்பதொன்றன்று. சமயங்களின் அடிப்படையான கருத்துக்களிற்கூட முன்னைய உறுதிப்பாடில்லை. முடிந்த முடிபுகளெனவும் தனிச்சிறப்புக்களெனவும் இதுகாறும் கொள்ளப்பட்டு வந்தனவற்றிலும் அவநம்பிக்கை தோன்றிவிட்டது. பண்டைய நம்பிக்கைக்குப் பதிலாகத் தனிப்பட்ட அபிப்பிராயங்கள் தங்குதடையின்றி வெளிப் போந்து உலவுகின்றன. சமயத்துறையில் தோல்வி வுணர்ச்சியும் நம்பிக்கை யிழப்பும் மக்கள் சமயவாழ்க்கையை உலைத்து வருகின்றன. மக்கள் வாழ்க்கையில் கடவுட்கிடமில்லா வண்ணம் பிறவெல்லாம் புகுந்து செறிந்து விட்டன.

ஆயினும், இந்தியா இன்னும் கடவுளைத் தன்வாழ்க்கை நடுவண் வைத்துப்போற்றிவர முயலுகின்றது. ஆனால், இவ்வாறு சமயத்தை இன்றும் பற்றிக்கொண்டிருப்பது பண்டை அநாகரிக காலத்திற்கடுத்ததேயன்றி இக்காலத்துக் கொவ்வாதென்று மேனாட்டார் கூறுவர். சாதிசமயப் பூசற்கெல்லாம் சமயமே உத்தரவாதியாம் என்று தீவிர ஆராய்ச்சியாளர் சிலர் செப்புகின்றனர். தற்கால ஜன சமூகத்தின் தொல்லைகளை யொழிக்க வழிதேடாச் சமயத்தாற் பயனில்லை என்றும், இவைகள் நீங்கிய பின்பு அவகாசமிருந்தால் ஆன்மலாபம் பற்றி ஆராய்ச்சிகள் செய்துகொள்ளலாம் என்றும் வேலையின்றித் தவிக்கும் வாலிபர் பலர். சிலர் தமக்கு மட்டில் ஆத்மானந்தம் கிடைத்தாற்போதுமென்று அதில்மட்டும் வேட்கைகொள்வர். இன்னும்சிலர் சமயச்சார்புடையோர்போல் பிறர்க்குக் காட்டிக்கொள்ளுதல் சௌகரியமானதென்னுங் கருத்தால் சமயிகளென நடித்துவருகின்றனர். மற்றுஞ் சிலர் சமயத்தைப்பற்றி யாதொரு சஞ்சலமும் படாதிருப்பதே சாலவும் அழகியதென்று சந்துஷ்டியாயிருக்கின்றனர். பொது ஜனங்களோ குருட்டு நம்பிக்கைக் குழியில் விழுந்து கிடக்கின்றனர். சமயவிஷயத்தில் இந்நிலையில் நாம் என்று மிருக்க முடியாது. இக்குழப்பத்திலிருந்து நீங்கி ஏதாவதொரு சற்சமயத்தை அடையவேண்டும்.

யாரெது சொல்லினும் மனிதன் தன் ஆன்மாவின் தேவைகளை அலக்ஷியஞ் செய்து கொண்டு, உண்டுறங்கிச், சந்ததி பெருக்கிச் சாதலோ டமைவுபெற முடியாது. "நான் யார்"? "என் வாழ்வின் முடிவென்ன"? என்னுங்கேள்விகளைக் கேட்கு மியல்புதான் மனிதனை விலங்கினும் வேறுபடுத்திக் காட்டுகிறது. 'பாஸிஸம்' பரவியுள்ள நாடுகளிலும், பொதுவுடைமைக் கட்சிநாடாகிய ருஷ்யாவிலும்கூட, சமயமும் நம்பிக்கையும் அடியோடு மாய்ந்துபோகவில்லை. ஆனால், அது புது உருவங்களைப் பூண்டுள்ளது. கோட்பாடுகளும் சடங்குகளும், சமயத்தின் பேரில் முன்னாளில் நடந்த துன்பங்களி யாவும், அதன் புதியவடிவிலும் இணைந்தே காண்கின்றன. நந்தேயத்தில் தேசியவாதிகள் சிலர் விஷயத்திலும் இதே

உண்மை விளங்குகின்றது. ஈதெல்லாம் காட்டுவது என்ன வென்றால், நம்பிக்கையும் சமய உணர்ச்சியும் மனிதனுக்கு இயல்பாகவே உள்ள வேட்கையை நிறைவேற்றவேண்டிய அவசிய மொன்றுளது என்பதையேயாம். ஆகையால், சுயநலநாட்ட முடையோர் இவ்வேட்கையைத் தம் நலத்திற் காகப் பயன்படுத்திக்கொள்ளு முன்னர், நாம் அதனை நன் னெறியிற் செலுத்தி நிறைவேற்றி வைப்பது நம் கடமை யென உணரவேண்டும்.

மக்களுக்குத் திருப்தி தரக்கூடிய எந்தச் சமயத்திலும் நம்பிக்கைக்கும் உண்மை காணும் அறிவிற்கும் இடமிருந்தாக வேண்டும். இல்லையேல், சமயத்தின் பேரால் முன்பு நடந்து வந்த அட்டூழியங்கள் மீட்டுந் தலைகாட்டலைத் தடுக்கவு முடி யாது; சமயத்தால் விளையவேண்டிய பெரு நலங்களைப் பெறவு முடியாது. இந்நோக்கம் நிறைவேறற்கு, அறிவியல் நூல் முறைகொண்டு சமயத்தை அணுகவேண்டும்.

மனிதனுக்கு அவித்தை இருப்பதனால், சமயத்திற்கு அவசியம் ஏற்படுகின்றதென இந்துமதம் கூறும். அவித்தை அபிமானத்தைத் தோற்றுவிக்கின்றது. ஆனால் ஒவ்வொருவ ரும், உலகானுபவத்தின் மேம்பட்ட உணர்வு நிலையைப்பெற்று உயர்ந்து, சுதந்தரத்தையும் அபயத்தையும் (பயமின்மையை யும்) அடைதல் கூடும். மனிதன் தன் அறியாமை என்னும் அந்தகாரத்தை ஞானமென்னும் ஒளியால் அகற்றி, பரம் பொருளோடு ஏகனாகி ஒற்றித்து நின்றால்தான், அவன் உண்மையில் சமய வாழ்வு வாழ்பவனாகக் கொள்ளப்படுவான். இவ்வாறு உயரிய நிலையை எட்டி, அநுபவமும் பெற்று, பிரபஞ்சம் எவ்வாதாரத்தின்மேல் நிற்கின்றதென்பதைக் கண்ட ஒருவன்—மனோவாக்காதிகளால் காணமுடியா மெய்ப் பொருளை ஒரு கணமேனும் தரிசித்த ஒருவன்—பிறமனிதர் கள், வெவ்வேறு உடல்களில் தனித்தனியே இயங்கினும், தன் னில் வேறானவர்கள் என்று ஒருபோதும் எண்ணான். தன் னலத்திற்காகவோ, குறுகிய கூட்டநலத்திற்காகவோ ஏதொன்றும் செய்ய அவன் இணங்கான். அன்பு, வாய்மை,

சான்றாண்மை என்னும் இவைகள் உண்மையாகச் சமயநெறி நிற்போனுக்கு இலக்கணங்களாம்.

இந்நாளில், மக்களது அடிப்படையான தேவைகளனைத்தையும் கருதி, கட்டுக்கதைகளையும் அற்புதங்களையும் தனக்காதாரமாகக் கொள்ளாமல் விடுத்து, மனிதனது சொந்த அனுபவத்தையே அடிப்படையாகக் கொண்டு, நல்லொழுக்கத்தைக் கட்டாயமானதெனக் காட்டி, மன்னுயிர் நேயத்தையும் மனங்கொள நாட்டி, எத்துயருறினும் உறுதுணை தானே என்றும் புலப்படுத்தி, மனிதன் கட்டுகளினின்றும் விடுபட்டுச் சுதந்தர உணர்ச்சி பெற வழிகாட்டும் ஒரு சமயத்தை வளர்ப்பது உலகத்திற்கு இன்றியமையாததாம். அன்பு வாழ்க்கைக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்ட சத்தியநாட்டச் சமயமே, சிதைந்து கிடக்கும் தற்கால உலகைச் சீர்பெற்று எழச் செய்யவல்லதாகும்.

இந்தக் கட்டுரையில் இடமின்மையால், மேற்சுருக்கித் தந்த நல்லுரையின் நாயகக் கருத்துக்கள் சைவசமயத்தில் எவ்வாறு அமைந்துள என்று விளக்க இயலவில்லை. ஏட்டுச் சுரைக்காய்ச் சமயத்தையும், சமயப் பூசல்களையும் சைவம் பெரிதும் கடிகின்றது. சமயாதீத நிலையிலுள்ளது பரம்பொருள் என்று கட்டுரைக்கின்றது. முப்பொருளியல் புணர்ந்து, பற்றற்றான் பற்றினைப் பற்றிப் பாசவலி கடக்கு நெறி பணிக்கின்றது. உண்மைக்கு மாறான கதைகளும், குருட்டு நம்பிக்கைகளும் அதற்கு வேண்டா. ஞானத்தால் வீடென்று நவில்கின்றது. "அன்பும் அருளும் அறிவுக் கடையாளம்" என்றும், "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறைசிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்றும் அறிவுறுத்துகின்றது. "பூதமைந்து நிலையிற் கலங்கினும்" மெய்யடியார் மனங்கலங்கார் என்கின்றது. அவர்கட்குச் சுவர்க்கங்களும் பொருளல்ல என்று புகலுகின்றது. அந்நெறி நின்றோர் அநேகரை முன்னாளிற்பெற்றிருந்தது. அதன் பரமாசாரியர்கள் வாழ்வையும் போதனையையும் ஆராய்ந்து பின்பற்றுவது அறிஞர் ஸ்ரீ இராதாகிருஷ்ணன் அவர்கள் குறிக்கும் உண்மைச் சமய நெறியில் நிற்பதேயாகும்.

கோலப்பட்டிருக்கின்றன. அச்சட்டங்களை வலியுறுத்துவதே நூலின் பெருநோக்கம். பெரியார்களின் சரித்திரம் உரிய காலத்தில் எழுதப்படாமையால் அவர் புகழ் மறைகிறது. சில சமயத்தில் உண்மைச் சரித்திரத்தில் பொய் வதந்திகளும் நுழைகின்றன. இச்சுவாமிகள் விஷயத்தில் அக்குறை நேரா வண்ணம் பாதுகாத்த திரு. இராமலிங்கனார் அவர்களுக்குத் தமிழுலகம் நன்றி பாராட்டுங் கடமைப்பாடுடைத்து. இந்நூல் பதினொரு அதிகாரங்களையுடையது; 'தன்னைப் படிக்கத் தொடங்குவோர்க்கு மேன்மேல் விஞ்சும் நலம் பல காட்டித் தன்னை முற்றும் படித்து மகிழுமாறு செய்யும் ஆற்றலுடையது.' நூலின் இறுதியில் சுவாமிகளின் பாக்கள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் முந்நூறு பக்கங்களைக் கொண்டது. விலை ரூ 1—8—0 கிடைக்குமிடம்: திருவாளர் ஆ. நரசிம்மலு நாயுடு அவர்கள், c/o குமரன் பிரஸ், காஞ்சிபுரம்.

பெரிய புராணம்

செந்தில்வேல் முதலியார் பதிப்பு

ராயல் அளவு முழு கலிக்கோ பைண்டு

ஒவ்வொரு புராணத்தின் இறுதியில் வசனமும் சேர்க்கப்பட்டுள்ளது.

பிரதி ஒன்றின் விலை ரூ. 1 6 0 }
ஆறு பிரதிகள் ,, ,, 7 8 0 } தபாற் கூலி வேறு.

கிடைக்குமிடம் :—

சைவசித்தாந்த மகாசமாஜம்,

"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத்தெரு, மயிலாப்பூர், சென்னை.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 10. No. 11

சைவ சித்தாந்த மகா சமாஜம்
முப்பத்திரண்டாம் ஆண்டு
நிறைவு விழா, வேலூர்

பேரன்புடையீர்,

இச்சமாஜத்தின் முப்பத்திரண்டாம் ஆண்
நிறைவு விழாவும் அதை யொட்டிய சைவர் மகா
நாடும் இராயவேலூரில் 1937௵ டிசம்பர்௴ 29வ
(புதன்கிழமை) முதல் மூன்று நாட்களில் திரு
கோவலூர் ஆதீனத் தலைவர் திருப்பாதிரிப்புலியூ
ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்
(ஞானியார் சுவாமிகள்) தலைமையில் நடைபெறும்.
இவ்விழாவின் பகுதியாகச் சைவ இளைஞர் மகாநாடு
ஒன்று 30-12-1937ல் அண்ணாமலைப் பல்கலைக்
கழக விரிவுரையாளர் சைவத் திருவாளர் - அ. சிதம்
பரநாத செட்டியார் எம்.ஏ., அவர்கள் தலைமையி
கூடும். விரிவான நிகழ்ச்சிமுறை அடுத்த இதழி
வெளிவரும். தாங்கள் வாழ்க்கைத் துணை மக்கள்
முதலிய உறவினரோடும் ஏனைய அன்பர்களோடும்
தங்கள் சபையின் பிரதிநிதிகளோடும் தவிராமல்
வந்திருந்து நடத்தி வைக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

V. S. பத்மநாப முதலியார், பி.ஏ.,பி.எல்., வரவேற்புத் தலைவர்

ராவ்பகதூர் - V. A. அருணாசல முதலியார்,
வரவேற்பு உதவித் தலைவ

ராவ்பகதூர் - V. முருகேச முதலியார்,
V. D. அருணாசல முதலியார்,
வித்வான் - புரிசை முருகேச முதலியார்,
C. S. இராஜா பிள்ளை, வரவேற்புக் காரியதரிசிகள்.

ம. பாலசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.,
சமாஜப் பொதுக் காரியதரிசி

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapati Mudali Street, Royapettah, Edited and Published by A. Soma sundaram Chettiar, M. A., for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Stre Mylapore, Madras.